வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்

பொது நூலகம்
மாநகராட்சி மன்று
15-2-1995

எரிந்த யாழ் நூலகத்தினுள்ளிருந்து
உடைந்த சாளரமொன்றினூடாக
எமது 'கமரா' வெளியே பார்த்தபோது...



இப்படத்திற்கு உங்கள்
கவிதை வரிகளை எழுதி
அனுப்புங்கள்

## இந்த இதழில்...

- ★ நேர்காணல்
- ★ செய்மதி செய்திகள்
- ★ விக்ரோறியா அரசி

*மற்றும் -*
*பலசுவை அம்சங்கள்*

---

**போராட்ட வரலாற்றில்...**

*நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். அது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாற்பட்டது.*

*தமிழீழத் தேசியத் தலைவர்*
**வே. பிரபாகரன்**

சாளரம் கதவு 4 (30) காற்றலை 14

# கவலைக்குரிய நிகழ்வு

தமிழ் நாடு தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஈழத்திலிருந்து சென்ற தமிழறிஞர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை அவமானகரமான ஓர் சம்பவமாகும்.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முறைப்படி உத்தியோக பூர்வமான அழைப்புக்கள் எவையும் ஈழத்தமிழறிஞர்கள் பலருக்கு விடுக்கப்படவில்லை. தமிழராய்ச்சி மாநாட்டின் இலங்கைக் குழு உறுப்பினர்களுக்குக் கூட அழைப்புகள் இல்லை.

இது ஒருபுறமிருக்க, இந்த மாநாடு குறித்துப் பல கேள்விகளும் விமர்சனங்களும் முன்கூட்டியே பலரால் எழுப்பப்பட்டன. அரசியல் சார்ந்த–தமிழக முதலமைச்சருக்காக நடத்தப்படுகின்ற ஒரு கேளிக்கை நிகழ்வு இதுவென பல தமிழகப் பத்திரிகைகள் கூட கருத்து வெளியிட்டிருந்தன. அங்குள்ள அறிஞர் பலரும் இம்மாநாட்டைப் புறக் கணித்தனர்.

உண்மையில் இதன் பின்னணியில் திட்டமிட்ட அரசியற்காரணிகள் பல உள்ளன. இந்திய – தமிழக ஆளும் வர்க்கத்தினர் தமிழீழத்தில் வளர்ந்து வரும் தமிழ்த் தேசியத்தின் மீதுகொண்டுள்ள வெறுப்புணர்வின் வெளிப்பாடு இதில் நன்கு புலனாகிறது.

மாநாட்டில் பங்குகொள்ளும் இனிய கனவுகளோடு பேராளர்களுக்கான சிறப்பு விடுதியில் துயில்கொண்டிருந்த அறிஞர்களை நள்ளிரவில் வந்து கதவைத்தட்டிய இந்திய காவல்துறை, ''விடிவதற்குள் இடத்தைக் காலிபண்ணு'' என்று உத்தரவிட்டதோடு, விடிந்ததும் விமானத்திலேற்றி அனுப்பியும்விட்டது.

இந்தத் துரதிஷ்டவசமான நிகழ்வு சம்பந்தப்பட்ட அறிஞர்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது. அதையும்விட –

ஈழத்தமிழர் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்ட, ஓர் கேளிக்கை மாநாட்டிற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கவேண்டிய எமது அறிஞர்கள் அவ்விதம் செய்யாமல் தஞ்சாவூர் சென்றமை மிகுந்த கவலைக் குரிய சம்பவமாக மனதை உறுத்துகிறது.

# சிறீலங்கா விஞ்ஞானியின் இழப்பு

சிறீலங்காவைச் சேர்ந்த விஞ்ஞானியான கலாநிதி சிறில் பொன்னம்பெருமாவின் இறப்பு சர்வதேச விஞ்ஞான உலகுக்கு பெரும் இழப்பு.



இன்றைய உலகில் விஞ்ஞானத்தின் உயர் பட்சமாக விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இரு பிரதான நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் நாஸா விண்ணாய்வு நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவுத் தலைவராக இந்த சிங்கள விஞ்ஞானி இருந்தார். இந்த உலகில் உயிர்களின் பரிணாமம் குறித்த ஆய்வுகளில் முன்னின்றவர் பொன்னம்பெருமா. 'உயிர்களின் ஆரம்பம்' 1973 ல் இவர் எழுதிய நூல் – இவரை உலகப்புகழ் பெற்றவராக்கியது.

செவ்வாயில் உயிரினங்களைத் தேடும் நாஸா நிறுவனத்தின் ஆய்வில் மிக முக்கிய பங்கை வகித்தவர் இவர். பூமியின் மீது விழும் எரிகற்களில் இரசாயனவியல் பரிசோதனையைச் செய்து உயிரினங்கள் எங்கிருந்து வந்தன என்பது பற்றி சில ஐயுறு கருத்துக்களை வெளியிட்டார் பொன்னம்பெருமா. இவர் இறக்கும் வேளையில் அமெரிக்காவின் மேரிலான்ட் பல்கலைக்கழகத்தில் இரசாயன பகுப்பாய்வுப் பிரிவுத் தலைவராக இருந்தார். றோயல் இரசாயனவியல் நிலைய உறுப்பினராக இருந்த இவர் இந்திய தேசிய விஞ்ஞானக் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டவர். 1923 ஒக்ரோபர் 16 ல் சிறீலங்காவின் காலியில் பிறந்த இவர் தனது 71 வயதில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி மரணமடைந்தார்.

நோபல் பரிசுபெறும் தகுதி மிக்கவராக இந்தச் சிங்கள விஞ்ஞானி திகழ்ந்தார்.

# இடைத் தீர்வு

துயர் முகங்கள்
தூசிதுடைக்கும்

நீண்ட நாட்கள்
உப்புக் காற்றில் ஊறிய
இரும்பு இதயங்கள்
துருப்பிடித்தவற்றை – கொஞ்சம்
துப்பரவு செய்யும்

பஞ்ச வயிற்றில்
பட்டினி படுத்திய
கஞ்சிக் கனவுகள்
கொஞ்சம் கலையும்

சொந்தங்களைத் தொலைத்த
சோக உடல்கள்
எஞ்சிய இருப்புக்களை
எடுத்துப் பார்க்கும்.

கறுப்புக் கடைகளில்
சுரண்டல் சுதந்திரம் பறிபோகும்.
இவை இப்படி இருக்க,

எங்கேயோ வரையறுக்க வேண்டிய
எங்கள் எல்லைகள்
மறந்து போகும்.
''என்ர வீடு''
''என்ர காணி''
''என்ர தோட்டம்......
என எண்ணி
ஏங்கித் தவிக்கும்.

சிந்திக்க மறந்த
ஆறறிவு மிருகங்கள்
மீண்டும்
சந்திக்கு வந்து
சந்தோசம் கொள்ளும்.

பனிச் சாதிக்கு
போர்த்திய போர்வைகள்
தீர்வுகளின் திணிப்புகளால்
திரும்பத் தீண்டும்

இழந்த குருதியில்
சுவட்டுத் தூரிகைகள்
இலட்சியப் படங்களை
மீண்டும் வரையும்

கல்லறைகளிலே
உயிரோடு உறங்கும்
இலட்சிய விழிகள்
உல்லாசம் கொள்வோரை
உற்றுப் பார்க்கும்.

— க. ரட்ணேஷ்

# சந்திரிகா கூறும் 'கௌரவமான தீர்வு'
# தலைகீழாகவா? சரிநேராகவா?

"சிங்கள மக்களின் உரிமையைப் பாதிக்காத தீர்வு"; சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு;" "கௌரவமான தீர்வு" இப்படியாகத் தீர்வு பற்றிப் பல அடைமொழிகளை திருமதி. சந்திரிகா விஜயகுமாரதுங்கா பண்டாரநாயக்கா கூறி வருகிறார்.

தமிழ் மக்களின் உரிமை பற்றிய பிரச்சினையைக் கதைக்குமிடத்து சிங்கள மக்களின் உரிமையைப் பாதிக்காதிருக்க வேண்டும் என்று சந்திரிகா அடிக்கடி கூறுகிறார்.

தமிழ் மக்களின் உரிமையைச் சிங்கள அரசு மீறுகின்றது. தமிழ் மக்களின் உரிமையை மீறாதிருத்தல் என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

தமிழ் மக்களின் உரிமை என்பது சிங்கள மக்களின் உரிமையைப் பறித்தல் என்பதில்லை. தமிழ் மக்களின் உரிமை தமிழ் மக்களின் பிறப்புரிமை. 'தமிழ்மக்கள் மீதான ஒடுக்கு முறையை நீக்கு' என்பதுதான் இங்குகோரிக்கையே தவிர 'உங்களுடையவற்றை எங்களுக்குத் தாருங்கள்' என்பதல்ல.

எமதுரிமையை மீறாதீர்கள் என்பதன் பொருள் உமது உரிமையைப் பறிப்பதென்பதில்லையே. அப்படியில்லையெனில் தமிழரின் உரிமையைப் பறிப்பதும் சிங்களவர்களின் உரிமைகளில் ஒன்று என்பதுதான் வாதமாகுமோ?

அடுத்து "சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு" என்பது தமிழர் தமக்குச் சொந்தமில்லாத ஒன்றை - சிங்களவருக்குச் சொந்தமானதை, தமக்குப் பிச்சையாகத் தருமாறு இரந்து கேட்கும்போதுதான் தருபவனும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றநிலை எழுகிறது. தமிழ் மக்களின் உரிமையைச் சிங்கள மக்கள் அபகரிப்பதை நிறுத்தவேண்டும் என்று சந்திரிகா சொல்லும் நாள் வருமோ? அடுத்துச் சந்திரிகா கூறும் "கௌரவமான தீர்வு" என்பதைப் பார்ப்போம்.

ஒடுக்குமுறையை நிறுத்துவதுதான் கௌரவம், அபகரிப்பைக்

கைவிடுவதுதான் கௌரவம். உண்மை இப்படியிருக்க சந்திரிகா கருதும் ''கௌரவம்'' என்ன?

சிங்களத் தலைவர்கள் எப்போதும் பதங்களை தலைகீழாகவும், தமக்குச் சாதகமாகவும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் எதனையும் ஒடுக்குமுறையின் கோணத்திலிருந்து பார்க்கிறார்கள். உதாரணமாகசிங்களத் தலைவர்கள் வடக்கு கிழக்கு இணைப்பு எனும் பிரச்சினை பற்றிக் கதைக்கிறார்கள். இங்கு பிரச்சினை இணைப்புப் பற்றியதல்லவே; பிரச்சினை ஏன் பிரிக்கிறீர்கள் என்பதுதான். எனவே இங்கும் பிரச்சினை இணைப்புப் பற்றிய பிரச்+னை அல்ல பிரிப்புப்பற்றிய பிரச்சினைதான். தமிழ் மக்களை நீங்கள் இரண்டாகப் பிரிக்கிறீர்கள். ஒடுக்குமுறையாளர்கள் எப்போதும் பொருளையும் பதத்தையும் தலைகீழாக்குவது வழக்கம். உதாரணமாக இந்தியா ஈழத் தமிழ் மக்கள் மீது இராணுவ ஒடுக்குமுறைகளைப் புரிந்தகாலத்தில் ஒடுக்குமுறை வானொலிச் சேவைகளை நடாத்தினார்கள். அந்த வானொலிச் சேவைகளில் ஒன்றிற்குப் பெயர் ''அன்பு வழி'' மற்றையதற்குப் பெயர் ''நேசக் கரம்'', இந்த ''நேசக்கரங்கள்'' தமிழ் மக்களை எப்படிக்கொன்று குவித்தன என்பதை வரலாறு காட்டியது.

இப்படித் தலைகீழாகப் பிரச்சினைகளை விளங்காமல் – பார்க்காமல் – சரிநேராகப் பிரச்சினைகளை விளங்கவும் பார்க்கவும் வேண்டும். அதுதான் கௌரவமான தீர்வு.

— சாரணன் —


# தயா மரக்காலை தரும்

**விந்தைமரம் பற்றிய தகவல்**

உலகிலேயே உறுதியான மரம் சோவியத் நாட்டின் தூர கிழக்கிலும், பசுபிக் பிரதேசத்திலுள்ள கெட்ரோவாயா காடுகளிலும் உள்ளன. இதன் பெயர் 'ஸ்கிமிட் பிர்ச்'.

இரும்பைப்போன்ற உறுதி படைத்தவை. துப்பாக்கித் துண்டுகளாலும் துளைக்க முடியாது. கோடரியினால் வெட்டினால் முனை மழுங்கிப்போய்விடும் அவ்வளவு உறுதி மிக்கமரங்கள் அவை.

**தயா மரக்காலை**

**சுன்னாகம் — யாழ்ப்பாணம்**




*ஈழத்தில் ஓவியக்கலை*
*ஓர் கண்ணோட்டம்* **II**

முந்தைய இதழில் வந்த ஓவியர் மார்க் அவர்களின் பேட்டியைத் தொடர்ந்து, சென்னை மற்றும் கைப்பணிக் கல்லூரியின் மாணவரும், தனபால், ராய் சௌத்ரி, பணிக்கர் போன்றோரிடம் கல்வி பயின்றவரும், சிறந்த உயிரோவிய கலைஞரும் முன்னாள் சித்திரக்கல்வி அதிகாரியுமான ராஜரத்தினம் அவர்கள் தன்கருத்துக்களை கூறுகிறார்

# “புதுமை என்பது அறியாமை”

*கேள்வி--* வீரகேசரியில் வந்த திரு. பாலபாஸ்கரனின் விமர்சனம் பற்றி உங்கள் கருத்துக்களை கூறுவீர்களா?

*ரா. ர.* பல மாதங்கள் முன்பே ஒரு இந்திய சஞ்சிகையில் வெளிவந்ததன் மறுபிரசுரமே வீரகேசரியில் வந்துள்ளது. தேடலும், படைப்புலகமும் புத்தகத்தில் வந்துள்ள ஆக்கங்களில் 80 சதவீதம் இந்தியர்களுடையதே. இது மார்க் அவர்களின் தனிப்பட்ட மலர் என்று எடுத்துக் கொண்டாலும், இவர் தனக்கென்ற தனி ‘பாணி’ ஏதும் ஏற்படுத்திக் கொள்ளாதது பெருங்குறை என்றே சொல்ல வேண்டும். ஆரம்ப காலங்களில் இவர் தாகூரின் முக்காடிட்ட பெண்களைச் செதுக்கினார். பின் இவர், பல மேல்நாட்டு ஓவியங்களின் அடியொற்றி, புதுமை என்ற தூண்டுதல் ஏற்பட்டவுடன் கட்டுமீறிய வேகத்தில் அகப்பட்டதையெல்லாம் அப் புத்தகத்தில் அளித்துள்ளார். ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு பாணியில்_ நிலையற்ற நிலையில் – (Wavery) மேலும், நவீனம் (Modern) என்பது பெயர் மட்டும்தான். இது 100 வருடம் பழமையானது. 1910 ல் புது இயல் தோன்றி விட்டது. பழையன திரும்புதலும் எமது அறியாமையும் பின்னிப் பிணைந்ததே புதுமை.

**— மாதவி —**

இவரது ஓவியங்களில்—இதில் பிர சுரிக்கப்பட்டிருப்பனவற்றின் பல ஓவியங்கள் ஏற்கனவே பலர் வரைந்த ஓவியங்களின் மறு பிரதியே.

01. தேடலும், படைப்புலகமும் அட்டைப் படத்தில் வந்துள்ள 'திருமுகம்' 1912ம் ஆண்டில் எமில் நோல்டே (Emil Nolde) வரைந்த தீர்க்கதரிசி (Prophet)

02. மார்க்கின், மூவர் 2– தன பாலின் காளைகளைப் போன்றது.

03. சிப்பிக்குள்ளிருந்து – (Potticeli) பொத்தி செல்லியின் Birth of Veenus

04. மூவர் 1 - (Hendry Moore) ஹென்றிமூரின் Three Standing Figures

05. மீட்டல் – ஹென்மூரின் சிறிய முகம், பருத்த கழுத்து, திரண்ட தோள்கள், சூம்பின நெடிய கைகள் போன்றலட்சணங்கள்,

06. ராகங்களில் (ராகினி) ஒன்றான பைரவியையும் இவர் பிழையாகச் சித்தரித்துள்ளார். ஒருகன்னி, தன்னை பார்வதியாகப் பாவித்து, சிவனை வழிபடுவதே பைரவி ராகத்தின் அம்சமாக என்றோ இலக்கணம் வகுக்கப்பட்டது. (Indian Arts) பைரவி என்றால் பெண். ஆணல்ல; இவருடைய பைரவியில் சிவனே வீணையுடன் அலைவது போல் உள்ளது. வேறொரு சமயத் தலைவரை கேலிக்குரியவராக்கி நான் இப்படித்தான் உணர்கிறேன்என்றால் அந்த சமய சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமோ? பல படைப்பாளிகளின் கருத்துக்களும். ஓவியங்களுமே மார்க் அவர்களின் தனித்துவம். அடிப்படை தெரியாமல் நவீனம் பற்றி அளந்து கொண்டிருப்பது நகைப்பிற்குரியது (Ridiculous) நல்ல கட்டுரைகளின் தொகுப்பாக நூலை வெளியிட்டிருக்கலாம்.



தேடலும் படைப்புலகமும் அட்டைப் படம்



எமில்நோல்டேயின் ஓவியம்

மா நகர சபை
யாழ்ப்பாணம்

கேள்வி:- இது மார்க் அவர்களைப் பற்றிய தனிப்பட்ட விமர்சனம் மட்டும் அல்ல. ஈழத்து ஓவியர்கள் அனைவருக்கும் கிடைத்த அடி. அதே கலாசாலையில் படித்த நீங்கள் பாஸ்கருக்கு மூத்த மாணவராய் இருந்தும் மௌனித்திருப்பதன் அர்த்தம் என்ன?

ரா. ர. அவர் கூறியது சரி, அவர் பார்த்த திரிநாளே இந்தியா (Trienalle India) வில் பார்த்த படங்கள் உட்பட படங்களை வைத்துத்தான் நாங்களும் சேர்ந்து அவமானப்படுத்தப்பட்டிருக்கின்றோம். திரிநாலே இந்தியாவிற்கு ஈழத்து ஓவியர்கள் பங்காற்றினார்களா என்பது தெரியாது. குறைந்த பட்சம் இப் புத்தகம் வெளியிட்ட போதாவது எம்மைப் போன்றவர்களைக் கேட்டிருக்கலாம்.

மேலும் பத்திரிகைகளின் இருட்டடிப்பு. பத்திரிகைகளும் ஒரு பக்க சார்பாக இருப்பது போல் தெரிகிறது. ஒரு பத்திரிகையாவது சரியான விமர்சகர்களை அமர்த்திக்கொள்வதில்லை. ஈழத்தின் பெருங்குறையே விமர்சன ரீதியில் நடுநிலையற்ற தன்மை. அரசியல்வாதிகள் செய்வதை கலைஞர்கள் செய்வது வருந்தத்தக்கது. இன்னும் ஆழ்ந்துபோய் சிக்கையில் அடிப்படையே சரியில்லை என்றுதான் கருதுகிறேன். மக்களை கற்பிக்கின்றோம் (Educate) என்று சொல்லிக்கொண்டு பரச்சாரம் (Artificial Intution) செய்வது தவறு. மக்கள் தாமாக உணர்வார்கள். மலைப்பாம்பு தைலம் என்று சொல்லிக் கொண்டு, தேங்காய் எண்ணெய் விற்பதுபோல.

கேள்வி:- அடிப்படை என்றால் ஒரு கலைஞன் உருவாக்கப்படும் விதத்தில் என்றா குறிப்பிடுகிறீர்கள்?

ரா. ர. ஆம். ஓவியம் இங்கே கற்பிக்கப்படுவது சிறந்த ஓவியனை உருவாக்கும் அடிப்படை நோக்கத்தில் அல்ல. பிள்ளை பாடத்தில் 100 புள்ளி எவ்வாறு எடுப்பது என்று கஷ்டப்படுகிறான். பிள்ளை ஆசிரியரையும், ஆசிரியர் மேலதிகாரிகளையும் திருப்திப்படுத்த முனைகிறார்கள். இவர்களில் பலர் சித்திரம் பற்றிய தார்ப்பரியம் அறியாதவர்கள். அறிந்த சிலர் மௌனித்திருப்பதினால் தான் இந்நிலை. ஓவியம் அடிப்படையிலிருந்துசெல்ல வேண்டும், (Start from the root) மரபு, இயற்பண்பு ஓவியங்கள் கற்றபின் பரீட்சார்த்தமாக (Expremental) வும் கொள்கை ரீதியாகவும் சுயமாக சிந்தித்து, அவனது தனித்தன்மை விளங்க (Artist Personality) கலையைப் படையுங்கள். ஹெர்பட்ரீட் (Herbert Reed) ஹென்றி மெட்டிஸ (Henry

Metisse) இவர்களுடைய சிறுவர் சித்திரக்கல்வி பற்றிய ஆலோசனைகளை உலகில் எவரும் குறை கூறியது கிடையாது. எடுத்தவுடன் நவீனம் என்று சொல்லிக் கொண்டு, கண்டதைக் கோடு வர்ணம் பூசிவிட்டு இப்படித்தான் நான் உணர்கிறேன் என்றுசொல்லக்கூடாது.

கேள்வி - இயற்பண்பு ஓவியங்களைப் பிரதிசெய்வது கலையல்ல என்கிறாரே – திரு. மார்க்?

ரா. ர இதுவரை கலை விமர்சகர்கள் எவரும் நவீனக் கலை தவிர்ந்த மற்றவை கலையல்ல எனக் குறிப்பிடவில்லை. 'கிழட்டு நவீனத்தை' ஓர் ஆய்வுக் கலைமுயற்சி எனக் கூறுகிறார்களே தவிர, சுத்தமான கலையென்று கூறவில்லை. அன்பு காமம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு தெரிந்துவிட்டால் நான் எந்தப்பக்கம் சாய்ந்திருக்கிறேன் என்பது விளங்கும். அன்பு நிலைத்திருக்கக் கூடியது. காமம் என்பது எழுச்சி, விகாரம், வீழ்ச்சி. நவீன ஓவியம் என்பது கிரக சஞ்சாரம் Effemerical போல தோன்றுவது. தோன்றி மறைவது. பின் மீண்டும் தோன்றுவது ஏன் இத்துணை விளக்கங்கள்? இவர்கள் புத்தகத்திலேயே (தேடலும் படைப்புலகமும்) என் வழிக்குப் பொருத்தமான கட்டுரைகள் உள்ளனவே (பொய்களே மெய்யானால்– சிற்பி கன்னியப்பன் எழுதியது) இது அந்த கலாசாலையின் நெறி (Madras (School of Arts and Crafts)

மார்க்கினுடைய பல ஓவியங்கள் பிகாஸோ, மோடிகிளியானி, ஹென்றிமூர், தனபால் போன்றவர்களின் புகழ் பெற்ற படைப்புகளின் மறு பிரதியே. எமில் நோல்டேயின் தீர்க்கதரிசியில், கட்டமைப்பிற்கேற்றவாறு (Composition) வெளிச்சமும், இருளும் காட்டப்பட்டுள்ளது. (படத்தைப் பார்க்கவும்). அதன் தன்மையையும் தேவையும் விளங்காமல், மார்க் அவர்கள், வெளிச்சம் வரத்தகாத இடத்திற்கு வெளிச்சத்தைக் காட்டி கட்டமைப்பைச் சீர்குலைத்துள்ளார். இன்னொரு கலைஞனின் படைப்பை பிரதி செய்வது தான் கலையல்லவே தவிர. இறைவன் படைத்த இயற்கையை உறிஞ்சி, தன் ஆளுமைப்பட, படைக்க மிகுந்த ஆற்றல் தேவை.

கேள்வி:- கலைஞர்கள் மரபு, நவீன ஓவியங்களை சங்ககால, பாரதி கவிதைகளுடன் ஒப்பிடும்போது, நீங்கள் மட்டும் நவீன ஓவியங்களை தவறான ஒன்றாக கருதுவது ஏன்?

ரா. ர. நான் இதை ஆட்சேபிக் கிறேன்.

சங்க காலத்தில் அறியாமை இல்லை. படைப்பாளியும் அங்கீ கரிக்கும் சபையினரும், ரசிக்கும் மக்களும் அப்படைப்பைச் சீர்தூக் கிப் பார்க்கக்கூடிய ஆற்றல் உள் ளவர்களாக இருந்தபடியால் தான் சங்ககால நூல்கள் நிலைத் திருக்கின்றன. அதேபோல், பார தியின் கவிதைகளும் பாமரனும் புரிந்துரைக்கக்கூடிய வகையில் புரட்சிகர கருத்துக்களை, மற்ற வர்கள் எடுத்துக் கூறத் தயங்கிய கருத்துக்களை எளிமையாகச் சொன்னான். பாரதியின் கவிதை களை விளங்க வைப்பதற்கு மக் களை கற்பிக்கவேண்டிய அவசிய மிருக்கவில்லை.

நான் ஏதும் அறியாது (Unpolluted) குழந்தையாக சென்னை சென்றபோது நவீனம் மரபு, இயற்பண்பு ஓவியங்கள் பற்றி விவாதங்கள் மூலம் நன்கு அறிந்துகொண்டேன், நவீனம் என்பதற்கு நான் எதிரானவன் அல்ல. மரபு ஓவியங்களே நவீன ஓவியங்களின்தாய். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே அருபகருத்தியல் (Abstract art) இருந்திருக்கிறது. உதாரணம் மஞ் சள் பிள்ளையார், நடராஜர், Hertert Reed (Meaning of art page no 156) ''எல்லா வகை ஓவி யங்களுக்கும், அடிப்படைகளும், கொள்கைகளும் ஒன்றே'' என்கி றார். பிர்காசோ (Picasso / the Same Elementt and the same Principles rulein all)

சமீபத்தில் நான் கண்ட ஓவி யர்களில் குறிப்பிடத்தகுந்தவர் ஜி. ராமன். மிக முன்னிலையில் நிற்கிறார். இவரின் ஓவியங்களில் ரேகை சிறப்பும் தனுமை வர்ணங் களின் சிறப்பும் முன்நிற்கிறது. இவரது படைப்புக்கள் முழுக்க முழுக்க தஞ்சாவூர் பாணியிலி ருந்து வந்தவை. அமிர்தா ஷேர் கில் – இன் படைப்புக்கள் இது போன்றதல்ல. இவை ஐரோப்பிய தூரிகையும் இந்திய கலையகத் திரையும் சேர்ந்த கலப்பு. இவை ஒரு 'Hybrid' அவலம்' என்றே கொள்ளவேண்டும். புதுமை தேவை. ஆனால் அது கலப்படமாகவோ பிரதியாகவோ இருப்பின் ஏற்புடையதல்ல.


---

O 1957 இல் முதன்முதலில் சோவியத் ரஷ்யா' 'ஸ்புட்னிக்–1'' என்ற செயற்கைக் கோளை அனுப்பிய பின் இதுவரை 4000க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

# தமிழீழ நினைவோடு படகேறினீர்...

— கேணல் கிட்டு மற்றும்
ஒன்பது மாவீரர் நினைவாக

''கடவுளை வணங்கும் போது உனக்காக வேண்டிக் கொள்ளாதே உனக்காக எதையும் கேட்காதே. நீ சரியாக நடக்கும்போது அவை தானாகவே நடக்கும்... உண்மையும் சத்தியமும் உன்னை வழி நடத்தும்...



மா நகர சபை
யாழ்ப்பாணம்

ஓ... இவை கேணல் கிட்டு தன் மனைவி சிந்தியாவுக்கு இறுதியாக – 1992 டிசெம்பர் 15ம் திகதிக்குப் பின் எழுதிய கடிதத்தின் வரிகள். ஒரு இனத்தின் சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு யதார்த்த வாதியின் இந்தத் தத்துவ முத்துக்கள்

அவனது உள்ளத்தை, பொய்மையிலேயே கிடந்து உழலும் இந்த உலகுக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

தமிழன் வல்லவனாக மட்டுமின்றி, அவன் ஆன்மார்த்த ரீதியிலும், பலம் பெற்று உயரவேண்டும் என்ற தேசியத் தலைவரின் எண்ணத்திற்கு உருக்கொடுத்தவர்கள்... தமிழர்களின் அடிப்படைத் தாரக மந்திரமான, ''உண்மை, சத்தியம், நேர்மை'' என்ற அந்த வார்த்தை களைத் தம் இறுதிப் பயணத்தின் பொழுது உச்சரித்துக் கொண்டே தமிழீழத்தை நோக்கி வங்கக் கடலிலே வந்து கொண்டிருந்த வேளையில்...

''சத்தியமேவ ஜயதே'' என்ற கோஷத்தின் மூலம், புகழ் பெற்று உலகில் அகிம்சையின் பிறப்பிடம் என்றுசொல்லும் பாரதம், எமது அருமைத் தளபதிகள் பத்துப் பேரையும் அநியாயமாகக் கொன்று அழித்த அந்த நாளை உலகம் மறக்குமா? ஆம்... 1993 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ம் நாள் வங்கக்கடலிலே எரிந்த தீயிலே ஆகுதியாகிய மூத்த தளபதிகள் கேணல் கிட்டு மற்றும் லெப்டினன்ட் கேணல் குட்டி சிறி மேஜர் வேலன், கப்டன் ஜீவா, கப்டன் குணசீலன், கப்டன் வஜய், கப்டன் றொசான், லெப். நல்லவன், லெப். தூயவன், லெப். அமுதன்.

ஆகிய இந்தப்பத்துப் போராளிகளையும் இழந்துவிடுவோமென்று நாம் எண்ணி யிருந்தோமா? அல்லது சமாதானத்தின் தூதுவர்களாக அவர்களை அனுப்பி வைத்த ''குவேக்கர்ஸ்'' சமாதானக் குழுதான் நினைத்துப் பார்த்திருக்குமா...?

ஆர்ப்பரிக்கும்வங்கக் கடலிலே பாடி மகிழ்ந்து படகேறி வந்தவர்கள் தம் கைகளில் ஆயுதங்களையா கொண்டு வந்தார்கள்...!

* தம் அன்பு மக்களைச் சந்திக்க வேண்டும்...!
* அவர்களின் துன்ப, துயரங்களில் பங்குகொள்ள வேண்டும்...!
* தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்...!
* தம் தலைவனின் ஆணையைத் தொடரவேண்டும்...!

என்று தாய்த் தமிழீழ நினைவோடு கையிலே ''குவேக்கர்ஸ்'' சாமாதானச் செய்திகளைத் தாங்கிவந்த அந்தப்பத்து மாவீரர்களையும் வழிமறித்த இந்தியாவின் செயலால் நாம் தளபதிகளை இழந்து நிற்கின்றோம்...!

அன்று வங்கக் கடலிலே காற்றோடு காற்றாகக் கலந்துவிட்ட கேணல் கிட்டு மற்றும் ஒன்பது மூத்த போராளிகள் இந்த மண்ணிலே வாழ்ந்து இந்த மண்

ணின் விடிவிற்காகவே தம்மை அர்ப்பணிக்க ஓடி வந்தவர்கள். இன்று எம் மண்ணிலே ஓவியங்களாய் சிலைகளாய் நின்று விடிவின் பாதையைக் காட்டி நிற்கின்றனர்...

ஆம்!... அந்த மாவிரர்கள் விட்ட பணியை முன்னெடுத்துச் செல்வதற்குச் அணிவகுத்து நிற்கும் தமிழர் படைகளின் உதடுகளில் கேணல் கிட்டுவின் அந்த இறுதிக் கீதம் ஆழ்ந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றது .....! அது "சுதந்திர நிலம்" நோக்கியதாய்...!

நாடிருந்தும் நாடோடியாக
நாளெல்லாம் நாடெல்லாம்
ஓடுகின்றேன் ஓடுகின்றேன்
ஓடுதற்கு உடல்வலு தேவையில்லை
மனவலு ஒன்றே போதும்
ஓடுதற்த "கால்" எனக்குத் தேவையில்லை
போதிய உள உரம் மட்டும் வேண்டும்
ஓடுவதால் மீண்டும் ... மீண்டும் உறுதி பெறுகின்றேன்
நாம் ஓடாமல் இருப்பதற்கு...
ஓர் சுதந்திர நிலம் அமைக்க வேண்டும் என்று...

வல்வை ந.அனந்தராஜ்


# தகவல் துளிகள்

o வளியில் உள்ள ஓசோன் படையில் துவாரம் ஏற்படுவதற்கு கொன்கோட் என்னும் ஒலியிலும் அதிவேகத்தில்செல்லும் விமானங்களும், குளோரோ ஃபுளோரோ காபன் (CFC) என்னும் கூட்டு இரசாயனப் பொருட்களும் ஒரு பிரதான காரணம்.

o பிடிக்காத எண்ணும்பிடிக்கும்– உங்களுக்குப் பிடிக்காத ஒரு எண்ணை 9 ஆல் பெருக்க வரும் தானத்தால் 1 2 3 4 5 6 7 9 ஆகியவற்றைப் பெருக்கும்பொழுது அதே பிடிக்காத எண்களே அடுக்கடுக்காய் வரும்... உ+ம்:– 7X9 63 1 2 3 4 5 6 7 8 9 ஆல் பெருக்கிப் பாருங்களேன் எப்படி இருக்கு கணிதப்புதிர்?

# கொஞ்சம் சிரிக்கலாம்

ஐயா ...... சாமி...... இரண்டு நாளா சாப்பாடு இல்லை. நடக்க கூட முடியாமல் 'வீக்' காகஇருக்கு கொஞ்சம் 'கரண்ட்' இருந்தா போடுங்கோ தர்மம் கிடைக்கும்.





இந்தயுத்தத்தினால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். என்று கூறுவதெல்லாம் பச்சைப் பொய். சாதாரண இராணுவத்தினனாக இருந்த நான் வசதியுள்ள அரசியல் வாதியாக உங்கள் முன் நிற்கின்றேன் என்றால் அதற்கு என்ன என்ன காரணம்?

என்ர மகன் ரீச்சல், ஓட்டப் பந்தயம், நீளம் பாய்தல் எல்லாத்திலையும் கெட்டிக்காரன்.



என்ர மகன் குதிரையாட்டத்தில் கெட்டிக்காரன்.

ரெயினுக்கும் ஹெலிமாதிரி மேலுக்கு காற்றாடி எல்லாம் இருக்குமா அப்பா?



கருத்து - புவி

சித்திரம் - தயா

# குரங்குத் தொழிலாளர்கள்

'குரங்குகளும் தொப்பி வியாபாரியும்' கதை நமக்கெல்லாம் தெரிந்த ஒன்றுதான். தொப்பி வியாபாரி நடந்து வந்த களைப்பில் மரத்தடியில் நித்திரையாகி விடுகிறான். தொப்பிகளை எடுத்துத் தலையில் அணிந்து கொண்டு, குரங்குகள் மரத்தில் இருக்கின்றன. அதனைக் கண்ட வியாபாரி தான் அணிந்திருந்த தொப்பியை எடுத்துக் கீழே எறிகிறான். குரங்குகளும் அவ்வாறே எறிகின்றன. புத்திசாலித்தனமாக தனது தொபபிகளை மீட்டு எடுத்துச் செல்கிறான் தொப்பி வியாபாரி. இது சிறுவர் மத்தியில் பிரபல்யமான கதை.

இதென்ன... வேலைசெய்யிற நேரத்தில உந்த மனிதச் சேட்டை... முததின தேங்காயாகப் பார்த்து ஆய்த் தெரியாதே?...



பழைய இலக்கியத்தில்படித்த பாடல் காட்சி ஒன்றும் நினைவில் வருகின்றது. கனி பறிப்பதற்காக தன் காதுத் தோட்டைக் கழற்றி மரத்தின்மீது எறிகிறாள் பெண்ணொருத்தி. (அவ்வளவு பெரிய தோடு. அக் காலத்தின் செல்வச் செழிப்பைப் புலவர் சொல்கிறார்) மரத்திலிருந்த ஆண்குரங்கொன்று 'லபக்'கென்று அந்தத் தோட்டைப் பற்றிக்கொள்கிறது. அத் தோட்டினை அருகிலிருந்த தனது காதலிக் குரங்கின் காதில் வைத்து அழுத்துகிறது. காதலிக் குரங்கின் காதில் அதற்கான ஓட்டை இல்லாததால் காதலிக் குரங்கிற்கு வலிக்கிறது. என்றாலும் வலியினால் கண்ணீர் சிந்த தோடு போடும் சந்தோசமும் அதன் முகத்தில் தெரிகிறதாம். பாடலில் வரும் காட்சி அது.

சுவாரசியமான இக் கற்பனைகளைப் படித்திருக்கிறோம். குரங்குகள் இப்படி எல்லாம் செய்யுமா என நாம் எப்போதாவது ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறோமா?

தாய்லாந்திலிருந்து வெளியான உண்மைத் தகவல் ஒன்று குரங்குகளுக்கும் புத்திசாலித்தனம் இருக்கிறது என்று சொல்கிறது.

தாய்லாந்தின் தென்னந் தோட்டங்களில் ஆயிரக்கணக்கான குரங்குகள் தொழிலாளர்களாக பணி புரிகின்றன. மிக உயரமான தென்னைமரங்களில் அவை விரைவாக ஏறி தேங்காய்களைப் பறிக்கின்றன. நன்கு முற்றிய தேங்காய்களையும் முற்றாதவற்றை. யும் இனம்கண்டு படுங்குகின்றன மிக நுட்பமாக தேங்காய்களைப் பிடுங்கி கீழே போடுகின்றன. ஆறுகள் உள்ள பகுதிகளிலும் சேற்று நிலப் பகுதிகளிலும் தேங்காய் பிடுங்கிப் போடும்போது உருண்டு விழுந்தால் நீந்திச் சென்று அவற்றை எடுத்து வருகின்றன.

இக் குரங்குகளை புத்தியுள்ள தொழிலாளர்களாக மாற்றுதற்கு சொம்போன் சக்கவ் என்பவர் உரியமுறையில் பயிற்சிகளை அளித்து வருகின்றார். அதற்கான 'பயிற்சிப் பாடசாலை' ஒன்றை அவர் இருபத்தாறு ஆண்டுகளாக நடத்தி வருகின்றார். இவரின் மாணவர்கள் அனைவரும் குரங்குகள்தாம்.

''உன் கைகளை விரித்துப்பிடி இளைய மகனே'' ''அந்தத் தேங்காயைப் பிடி மகனே'' என திரு. செம்போன் சக்கவ் தன் குரங்கு மாணவர்களுக்கு மிக மென்மையாக சொல்லிக் கொடுக்கிறார். இவ்விலங்குகளை பயிற்றுவிப்பதற்கு மிகுந்த நிதானமும் பொறுமையும் தான் அவசியமானது என 54 வயதான சொம்போன் கூறுகிறார்.

நாளொன்றுக்கு முந்நூறு தொடக்கம் ஐநூறு வரையில் மிக உயர்ந்த தென்னைகளிலிருந்து தேங்காய் பறிக்கும், பயிற்றப்பட்ட குரங்கு மனிதனை விட பத்துமடங்கு ஆற்றல் வாய்ந்ததும், மலிவானதும் ஆகும் என அவர் சொல்கிறார். குறைந்த செலவில் வேலை செய்யும் குரங்குகள் ஆண்டொன்றிற்கு பல இலட்சம் ரூபா பணத்தை மீதப்படுத்துகின்றனவாம்.

ஒரு குரங்கைப் பயிற்றுவிப்பதற்கு மூன்று தொடக்கம் ஐந்து மாதங்கள் செலவாகின்றன. தென்னந்தோட்ட உரிமையாளர்கள் பலர் பயிற்சிக்காக குரங்குகளைக் கொண்டு சொம்போனிடம் வருகிறார்கள். அங்குள்ள தொழிலாளர் பற்றாக்குறையினை இக் குரங்குகள் பெருமளவில் போக்குகின்றன.

இப்போது சொம்போனின் குரங்குப் பயிற்சிப் பாடசாலை உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் ஆவலைக் கவரும் மையமாக மாறியுள்ளது. பல திரைப்படத் தயாரிப்பாளர்கள் 'குரங்கு நடிகர்'களுக்காக இங்கு வருகிறார்கள். பாத்திரங்கள் சரி

யாக அமையாவிட்டால் சொம் போன் திரைப்படத் தயாரிப்பாளர்களின் வேண்டுகோள்களை மறுத்துவிடுவார்.

கூடுதலான குரங்குகள் காடுகளில் இருந்து பிடிக்கப்பட்டவை என்றும், அவற்றிற்கு பயிற்சியளித்து அவ்வினங்களை மறைமுகமாக பாதுகாத்து வருவதாகவும் சொம்மோன் தெரிவிக்கின்றார். பயிற்றப்பட்ட குரங்குகள் பெறுமதிவாய்ந்தவை. அவற்றைக் கொண்டு வருவாயைப் பெறும் அதன் உரிமையாளர்கள் அம்மிருகங்களை நேசிப்பதோடு சிறந்த முறையில் பராமரித்து வரவும் வேண்டும் என்று இவர் தெரிவிக்கின்றார்.

இவ்வினக் குரங்குகளின் வயது இருபத்தைந்து ஆண்டுகளாகும். மூன்று வயதிற்கும் ஆறு வயதிற்கும் இடைப்பட்ட குரங்குகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. அவை தென்னந்தோட்டங்களில் சராசரியாக பதினைந்து ஆண்டுகள் வேலை செய்கின்றன.

தாய்லாந்தில் சுறாத்தனிமாகாணத்திலுள்ள தென்னந் தோட்டங்களில் வேலை செய்யும் அரைவாசிக் குரங்குகள் தனது பயிற்சிக் கல்லூரியின் 'பட்டதாரிகள்' என சொம்போன் சக்கவ் பெருமையுடன் கூறிக்கொள்கிறார்.

☐ ☐ ☐

## மாணவர் கட்டுரைப்போட்டி

சாளரம் யூன் – யூலை 1994 இதழில் அறிவித்திருந்த ''இன்றைய கலவி அமைப்பின் நன்மையும் தீமையும்'' என்ற தலைப்பிலான கட்டுரைப்போட்டிக்கு வந்த கட்டுரைகளில் எதுவும் பரிசுக்குரியதாக தெரிவாகவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

# பிஞ்சுகளின் சோகம்

தம் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு அநாதைகளாக வீதியில் விடப்பட்ட நாய்க்குட்டிகளை எப்போதாவது கண்டிருக்கிறீர்களா?

உணவின்றி, பசியால் கத்திக் கொண்டும் - வேடிக்கை பார்க்கும் சிறுவர்களின் அருகில் வந்து 'விசுக் விசுக்' கென வாலை ஆட்டிக் கொண்டும் - வீதியில் செல்வோரின் பின்னால் ஓடிக்கொண்டுமிருக்கும் அந்தக் குட்டிகளைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கும்.

இன்று ருவாண்டாவில் பெற்றோர்களைப் பிரிந்து அநாதைகளாகியிருக்கும் சிறுவர்களின் நிலையும், இந்த நாய்க்குட்டிகளைப் போலவே அமைந்துவிட்டது.




கொஞ்சப்பேர் அல்ல இரண்டு லட்சம் சிறுவர் சிறுமியர்

வீதியில் செல்வோரின் பின்னால் சென்று அவர்களின் ஆடையைப் பிடித்துக் கொண்டும் தம் பெற்றோரை கூவி அழைத்து அழுது கொண்டும் எரிமலைக் கற்களின் மேல் படுத்துத் தூங்கிக் கொண்டும் அலைந்து திரியும் இச் சிறுவர்கள் தொண்டர்களால் அழைத்துச் செல்லப்பட்டு அகதி முகாம்களின் முன்பாக வீதியோரங்களில் இருத்திவைக்கப்பட்டுள்ளனர்.

இக்கூடாரங்களைக் கடந்து செல்லும் மக்கள் இந்தப் பிள்ளைகளை அடையாளம் காண்பதற்காகவே இவ்வாறு இருத்தப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களை எவருமே கண்டுகொள்ளவில்லை. சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் அவர்களிடம் வந்து பேட்டி காண்கிறார்கள். அவர்களின் விபரங்களைச் சேகரித்து அவர்களின் பெற்றோரிடம் சேர்க்க முயல்கிறார்கள்.

ஐந்து வயதான பற்றிசும் நான்கு வயதான அவளது தங்கையும் தனது தந்தைக்கு என்ன நடந்தது என்று கேட்கப்பட்ட போது தங்கள் கைகளால் தலையிலடித்துக்கொண்டு அழுகின்றனர், தந்தை வெட்டிக் கொல்லப்பட்டதையும் இப்பிள்ளைகள் மயிரிழையில் உயிர் தப்பியதையும் அருகிலிருந்த தாதி கவலை தோய்ந்த முகத்துடன் கூறுகிறார்.

"எனக்கு நண்பர்கள் இல்லை. தந்தை கொல்லப்பட்டார். தாயாரைக் காணவில்லை" என அழுதபடி ஜீன் என்ற ஆறுவயது சிறுவன் கூறுகிறான்.

அந்தப்பிஞ்சுகள் ஒவ்வொன்றினது கதையும் இவ்வாறானதே.

தினசரி கொலரா நோயினால் பல சிறுவர்கள் இறந்து போகின்றனர்.

மாலையில், நோயினால் இறந்து போன சிறுவர்களின் உடல்களை ஏற்றிச்செல்ல ஐ.நா. நிறுவனத்தின் வாகனம் வரும். சீலையால் சுற்றப்பட்ட உடல்கள் வாகனத்தில் தூக்கிப் போடப்படும் சத்தம் 'தொம்' எனக் கேட்கும், பார்த்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் பயத்தினால் ஒருவர் கையை மற்றவர் பற்றிக் கொள்வர்.

ஐக்கிய நாடுகள் அனைத்துலக சிறுவர் பராமரிப்பு நிதியத்தைச் சேர்ந்த மருத்துவர் ஸ்ரீபன் சொல்கிறார். "கடவுளுக்காகவேனும் நாங்கள் இவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் மரணத்திலிருந்து தப்பி வந்தவர்கள் ஆகையால் அவர்கள் இறக்கக்கூடாது"

இவ்வளவு தொகையான அநாதைகள் இருந்தும் இவர்களைப் பொறுப்பேற்கக் கூடிய நிலையில் வெளியுலகம் இல்லை எனத் தொண்டர் அமைப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேற்கத்தைய முறைகளை அவர்கள் மேல் திணிக்க முடியாது. நாங்கள் அவர்களது குடும்பங்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என இன்னொரு அதிகாரி கூறுகிறார்.

மா நகர சபை
யாழ்ப்பாணம்

சில சமயங்களில் அழவும் முடியாமல், சிரிக்கவும் முடியாமல், பயத்தினால் நடுங்கிக் கொண்டு இந்தச் சிறுவர்கள் காலத்தைக் கழிக்கின்றனர்.

அண்மையில் ருவாண்டாவில் இடம் பெற்ற இனமோதல்களில் ஐந்து லட்சம் மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டதும், லட்சக் கணக்கானோர் அகதிகளாக எல்லைப்புறங்களிலுள்ள நாடுகளுக்கு சென்றமையும் நாம் அறிந்த விடயங்களே.

அந்த அவலங்களின் தொடர்ச்சியாக இந்த சிறுவர்கள் குறித்த துயரச் செய்திகள் மனித மனங்களை உலுப்பியெடுப்பதாகவுள்ளன.

– விவேக் –

## மாணவர்கள்

சூரியன் உதிப்பதோ அன்றி
மறைவதோ எமக்குத் தெரியாது.
அயல்வீட்டில் புக்காரா
அடித்தாலும்... தெரியாது
சொந்த மண்ணில் நிகழும்
இன அழிவுபற்றி ......?!
அந்நிய எதிரியின் நெஞ்சை
கலக்கும் புலியை ......???
எண்ணெய், மா, சீனி, துணி
என்ன விலை? ஊகூம்
இத்தனைக்கெல்லாம்...
நாங்கள் மாணவர்கள்

காலை விடியுமுன்பே 'ரியூசன்'
இடையில் பல 'ஸ்பெசல்' ஓட்டம்
மாலை வீடு திரும்பும் எமக்கு
காத்திருக்கும் 'பேசனல்கி ராஸ்'
தினமும் ஒவ்வொரு கொட்டில்
தேடித்திரியும் எமக்கு–மூளையில்
ஒன்றுமே ஏறக்காணோம்.
படித்த களை, பாய்ந்த களை
படுக்கைக்குத் தள்ள
தலையணையே தஞ்சம்
மறுநாளும் காலையில்
இதே ராகம் இதே தாளம்
இடையிடையே சிலபகற்கனவு
டாக்டராக, எஞ்சினியராக,
கனவுகள் நனவாவது ..!
ஓ! அதுவும் சந்தேகமே

இது காலம் கடந்த ஞானம்,
பெறுபேறு சொல்லித் தந்த பாடம்
ஓ...! எமது இளையவரே!
எங்கள் படிப்புகள்
உங்களுக்கு படிப்பினைகள்
எமது முகாரிகள்
உங்கள் பூபாளங்களாகட்டும்.

– ஆஷா பிரகாஸ்

# பகலவன் பதில்கள்

தி. சுஜீவன்,
புலோப்பளை வீதி, பளை.

❀ சினிமாப் படங்களைத் தடை செய்வதால் என்ன பயன்? இது சாத்தியமாகுமா? இனி எந்தக் காலத்திலும் தமிழீழத்தில் சினிமாப் படத்தைப் பார்க்க முடியாதா?

□ தென்னிந்தியத் திரைப்படங்கள் மக்கள் மனங்களில் நச்சு விதைகளைத் தூவுகின்றன. காட்சிகளிலும், வசனங்களிலும் ஆபாசம் அள்ளித் தெளிக்கப் படுகின்றது. இது சமூகத்தில் ஏற்படுத்தும் தீய விளைவுகளை தமிழ் நாட்டில் அதிகம் காணலாம். இந்நிலை இங்கும் பரவ வேண்டுமா?

இங்கு தரமான சினிமாவை எதிர்காலத்தில் நீங்கள் பார்த்து ரசிக்க முடியும்.

ந. புஸ்பகாந்தன்,
நாவற்குழி.

❀ இரவில் அடிக்கடி கனவுகாண்பது கூடாதா?

□ கனவு காண்பதில் பிரச்சினை இல்லை கனவுலகில் வாழ்வதுதான கூடாது.

வே. தாரணி,
மல்லாவி.

❀ புலிகளுக்கு ஹெலிகப்டர்கள் வந்துள்ளதாக கூறப்படும் செய்திகள் உண்மையானவையா?

□ சிங்கள பேரினவாதப் பத்திரிகைகள் தாம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன., 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'.

அ. சண்முகதாஸ்,
இராச வீதி, கோப்பாய் வடக்கு.

❀ இலங்கை இனப் பிரச்சினை தீர்வு பற்றிய இந்தியாவின் நிலைப்பாடு எப்படி இருக்குமென்று நீர் கருதுகிறீர்?

□ இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டால் தம்முடைய பிரச்சினை ஒன்று தீர்ந்தமாதிரி இருக்கும் என இந்தியப் பிரதமர் இலங்கை வெளியுறவு அமைச்சரிடம் அண்மையில் தெரிவித்தாராம். ஆனால் தீர்வு ஏற்பட்டுத் தமிழருக்கு அதிக அதிகாரம் வழங்குவதை இந்தியா உண்மையில் விரும்பாது.

❀ தாயக மீட்புப்போரில் ஒதுங்கி நிற்கும் சிலர் "சந்திரிகா அம்மையார் எந்தத் தீர்வை முன் வைத்தாலும் ஏற்கலாம்தானே. எப்படியோ நாங்கள் சிறுபான்மை இனம் அல்லவா" என்கிற மாதிரியாகக் கதைக்கின்றனரே இவர்களுக்கு உம்மால் ஏதும் கூறமுடியுமா பகலவனாரே?

☐ நீங்களே குறிப்பிடுகின்றீர்கள் 'ஒதுங்கி நிற்பவர்கள்' என்று அவர்களுக்கு நான் என்ன கூறவேண்டியுள்ளது. அவர்களை உள்ளே கொண்டுவரப் பாருங்கள் முடியாவிட்டால் அவர்களது கருத்துக்களை ஒதுக்கி வைப்பது தான் வழி.

அங்கநாதன்,
நல்லூர்.

❀ யாழ். நகரில் மும்முரமாக நடைபெறும் தனியார் வகுப்புகள் பயன்படத்தக்க வகையில் அமைகின்றனவா? அல்லது கல்விக்குப் பங்கம் விளைவிக்கின்றனவா?

☐ மாணவர்களை பரீட்சை எழுத தயார்படுத்தும் பணியைச் செய்கின்றன.

கே. கணேஸ்வரன்,
மட்டுவில்.

❀ வயதான காலத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமர் பணியை கொண்டு நடாத்த முடியுமா?

☐ பிரதமர் பணியை செயலாற்ற முடியுமோ என்னவோ மகன் அநுராவை சமரசப் படுத்துவது, தம் குடும்பத்தை ஒற்றுமைப்படுத்துவது போன்ற பணிகளில் தீவிரமாக பணியாற்றி வருகிறார்.

---

## அறிந்து கொள்ளுங்கள்

- உலகின் மிகப்பழமையான நகரம் - ஜெரிக்கோ
- உலகின் மிக அழகான நகரம் -பாரிஸ்
- உலக வங்கியின் தலைமையகம்- அமெரிக்கா
- நோபல் பரிசு வழங்குவதற்கு காரணமானவர் நோபல் அல்பிரட். சுவீடன் நாட்டைச் சேர்ந்த இரசாயனவியல் அறிஞர் ஆவார்.
- திருக்குறளையும் அடுத்து திருவாசகத்தையும் மொழி பெயர்த்தவர் Dr. G. U. போப்

– அங்கசன்
நல்லூர்
யாழ்ப்பாணம்.

# கண்டு பிடியுங்கள்

கண்டுபிடிக்கத் தெரிந்தவர்கள் யாரோ அவர்களுக்கே இந்த உலகம் சொந்தமாக இருக்கிறது. தொல்லை என்ன என்பதை உணர்ந்து அதை அடையாளம் கண்டுகொள்கிறவரைக் காட்டுங்கள். வாழ்க்கை, தொழில், மகிழ்ச்சியைப் பெறுவது ஆகிய அனைத்திலும் வெற்றி பெறக்கூடியவர் அவர் என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

கேள்விக்குறிகள் நிரம்பிய வாழ்க்கையைப் போல ஒரு மனிதனுடைய நிலைப்புத் தன்மையை சேதாரப்படுத்தக் கூடியது வேறு எதுவும் இல்லை. கேள்விகளுக்குப் பதில்களைக்கண்டு பிடிப்பது பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பது ஆகியவற்றை விட திருப்தியளிக்கக்கூடியதும் பயனளிக்கக் கூடியதும் வேறு எதுவும் இருக்க முடியாது.

காரியத்தைச் செய்து முடிக்கின்ற மனிதர்கள் நமக்குத்தேவை. அதைவிட எதைச் செய்யவேண்டும், அதைச் செய்வதற்கு வழி என்ன என்று சொல்லுகிறவர்கள் இன்னும் அதிகமாகத் தேவை. தவறாகச் செய்து கொண்டிருப்பவர்கள் இந்த உலகத்தில் நிறையப் பேர் இருக்கிறார்கள். எத்தனையோ விடயங்கள் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரிந்திருப்பவை தவறானவை. அதை அவர்கள் கண்டு பிடிப்பதில்லை. இவர்கள் எதையும் செய்யாமல் எதைப் பற்றியும் தெரியாமல் இருப்பதே நல்லது. அப்படி இருந்தால் தெளிந்த நிலையிலிருந்து அவர்கள் எதையும் ஆரம்பிக்க முடியும். அவர்கள் நினைப்பது சொல்வது, செய்வது எல்லாம் சரியானதுதானா என்று அவர்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. தவறாக இருப்பதில் எந்த அனுகூலமும் இல்லை. முதல் தடவையில் தவறாக இருந்தால் கூட தேவையான நேரத்தை எடுத்துக் கொண்டு பின்னர் சரியாகிவிடுவது இலாபகரமானதுதான்.



எல்லா அரசுகளிலும் தவறான செயல்களை சுறுசுறுப்புடன் செய்து தவறானகொள்கைகளை முடிவெடுத்து தவறான வழிகளில் அரிய செலவில் அவற்றைச்செயற்படுத்தி,

தவறான விளைவுகளை தோற்றுவிக்கின்ற மனிதர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.



தொழில் துறையிலும் பெரியதிட்டங்கள் தவறாகிப் போய்விடுவதுண்டு. கணனி (Computer) உதவக்கூடும். ஆனால் அது தவறு செய்கின்றபோது அது இமாலயத் தவறாக இருந்து விடுகிறது. நூற்றுக் கணக்கான மனிதர்கள் செய்கின்ற தவறுகூட அதற்குச் சமனானதாக இருக்கமுடியாது.

கல்வி என்பது கண்டுபிடிக்கச் சொல்லித் தருவது என்று சொல்லப்படுகின்றது. பிரச்சினை என்னவென்றால் கல்வி தொடக்கத்தில் ஆரம்பமாவதில்லை. கல்வியின் முடிவான நோக்கம் வாழ்க்கையில் வெற்றிபெறச்செய்வதாகும் வெற்றிஎன்பதை, வாழ்க்கைக் குறிக்கோளை அடைவது என்றுதான் கூற முடியும். இதைச் செய்யகல்வி மூன்று அடிப்படைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்

1) உங்களால் வெற்றிபெற முடியும் என்று உங்களை நம்பவைக்கிற மெய்யான, நம்பகமான தகவல்கள் மூலம் உங்களுக்கு உற்சாகமூட்ட வேண்டும்.

2) உங்களுக்கு எது தெரிய வேண்டும். எதைச் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை நீங்கள் கண்டு பிடிக்கும் விதத்தில் உங்கள் உள்ளுணர்வை அது தூண்ட வேண்டும். வெற்றிக்கு எது தேவையோ அதை நீங்கள் செய்யும்படியாக வாழ்க்கை முழுவதும் அது உங்களைத் தூண்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

3) வாழ்க்கையின் குறிக்கோளை நீங்கள் அடையத்தக்க விதத்தில் எளிமையான வெற்றிச் சூத்திரத்தை அது உங்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அது மட்டுமே கல்வி ஆகிவிடாது. இது ஒரு தேவையான ஆரம்பம்.

அரசு, தொழில், கல்வி, அன்றாட வாழ்க்கை எதுவாக இருந்தாலும் அதில் நீங்கள் சிறப்புஅடைய விரும்பினால், செல்வச் சிறப்பு அடைய விரும்பினால், தொல்லை என்ன என்பதை உணர்ந்து அதை அடையாளம் காண்பது அவசியம். நீங்களே எல்லாவற்றையும் செய்யவேண்டும் என்பதில்லை. அது தொடர்பான வேலைகளைச் செய்ய எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், கண்டு பிடிக்கத் தெரிந்தவனையே மிகப்பெரிய வெகுமதி சென்றடைகிறது.

எம். ஆர். காப்மேயர்

# அரும்புகள்

## மாணவர் ஆக்கம்

### அந்தாட்டிக் கடலில் உயிர்வாழ்வை பற்றிய ஒரு நோக்கு

உலகில் உள்ள கடல்களுள் உயிரினங்கள் அதிகம் காணப்படுவது அந்தாட்டிக்காவைச்சுற்றியுள்ள கடலில் தான் இந்த கடுமையான குளிரில் வாழும் உயிரினங்களின் ஆயுட்காலமும் அதிகமாக உள்ளது. பல நாட்கள் ஜீவிக்கமுடியும் என்பதால் இங்கு வாழும் உயிரினங்களும் அதிகமாகவே உள்ளது. ஆனாலும் உயிரின வகைகள் குறைவாக இருக்கின்றன. இருந்தும் இவற்றின் நெருக்கம் அதிகம்.

இந்தக் கடலில் கடற்பூண்டுகளும் கடல் நாய்களும் நீர் யானைகளும் அதிகமாக உள்ளன அத்துடன் மீன்களின் எண்ணிக்கையும் அதிகம். கிரில் எனப்படும் ஒருவகை சிறுபிராணி நிறைந்து காணப்படுகின்றன. இறால் போன்ற தோற்றத்துடன் நண்டைப் போல் காணப்படும் அதன் முதுகில் செந்நிற ஓடும உள்ளது. கிரில்களின் உடலில் அதிகமாக புரதச்சத்து உள்ளது. அதனால் இந்தக்கடலில் வாழும் அனைத்து உயிரினங்களும் கிரில்களைத் தின்றே உயிர் வாழ்கின்றன. பிளாங்டன் என்னும் உயிரினமும் அதிகளவில் மீன்களுக்கும் திமிங்கிலங்களுக்கும் உணவு ஆகின்றது. இந்தக் கடலில் ஆறு லட்சம் திமிங்கிலங்கள் வாழ்வதாக 1986 இல் ஆரார்ய்ச்சியாளரால் கண்டு பிடிக்கப்பட்டது.

120மீ. ஆழம் முதல் கடலின் அடித்தளம் வரை கடல் பூண்டுகளும் தாவரங்களும் உள்ளன அந்தாட்டிக்காவின் அடித்தள நீரும் வடக்கில் இருந்துவரும் நீரும் சந்திக்கும் இடத்தில் இருந்து தெற்கு நோக்கி எங்கு பார்த்தாலும் கிரில்களே காட்சி அளிக்கின்றன. மனிதர்களும் கிரில்களில் உள்ள புளோரைட்டை நீக்கி உணவாகப் பயன்படுத்தலாம். அந்தாட்டிக்காக் கடலில் அதிக உயிர் வளம் உள்ளது என்று ராஸ் என்னும் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளார்.

ஒரு செல் மட்டும் கொண்ட டயாட்டம் என்னும் பாசிவகை அதிகமாக உள்ளது. இந்த டயாட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இனங்கள் இருக்கின்றன.

டயாட்டம் வகையைச் சார்ந்த பைபிட்டோ பிளாங்டன் என்னும் ஒருசெல்தாவரம் தான் கடலில் அதிகமாக உள்ளது.

இ. தயாளினி ஆண்டு-9 யா/வேம்படி மகளிர் கல்லூரி

## சுற்றாடல் பாதுகாப்பின்றி பிண நகராகமாறிய போபால்

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் போபால் நகர் அமைந்துள்ளது. இந்நகரில் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையகத்தைக் கொண்டுள்ள இந்திய யூனியன் கார்பைட் லிமெற்றெட்டின் பொறித் தொகுதி அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையில் பல வகையான பீடை கொல்லிகள் தயாரிக்கப்பட்டது. இவைகளுள் ஒன்றான 'கிலின்' என்ற பீடை கொல்லி பிரதானமாக மெதைல் சயனற் என்ற அதிர்ச்சித் தன்மையுடைய பதார்த்தத்தினைக் கொண்டதாகும்.

1984ம் ஆண்டு டிசம்பர் 2ம் திகதி நள்ளிரவு இத்தொழிற்சாலையின் பொறித்தொகுதியிலிருந்து மெதைல் சயனைற்றைக் கொண்டிருந்த சேமிப்புக் கலத்திலிருந்து வெளியேறிய 40 தொன் நச்சு வாயு 25 சதுரமைல் பரப்பளவிற்குச் செறிந்து சென்று பல உயிரிழப்புக்களையும் பல்வேறு விதமான உடலூறுகளையும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியது. 4500 பேர் வரை இததிடீர் அனர்த்தத்தால் மரணமடைந்தனர், 20 ஆயிரம் பேர் வரை இவ்வாயுக்கசிவால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பகுதியைச் சேர்ந்த பலர் புற்றுநோய் அபாயத்தை எதிர் நோக்குவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். போபால் நச்சுவாயுப் பயங்கரம் நிகழ்ந்து பத்து வருடங்கள் கழிந்து விட்டாலும் அதன் தாக்கம் மனித உயிர்களினோடு கசிந்து கொண்டே இருக்கிறது

சுவாசத்தொகுதியுடன் தொடர்புடைய பிரச்சினைகள், கண்பாதிப்பு, தோல்பாதிப்பு, கருச்சிதைவு, குறைபாடுடைய சிசுக்கள் உடலின் உள்ளக உறுப்புக்களில் சேர்ந்த இரசாயன பதார்த்தத்தின் காரணமாக பல நாட்களின் பின் உடனடியாகத் திட்டவட்டமாக கண்டறிய முடியாத பாதிப்புகள் பல ஏற்பட்டன.

இவ்விபத்தினால் மனித சுற்றாடலுக்கு ஏற்பட்ட மிகமோசமான பாதிப்பின் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் பூச்சி புழுக்களைப் போல் செத்துமடிந்தார்கள், போபால் நகர் பிண நகராக மாறியது. ஒரு தசாப்தமாகியும் உலகமக்கள் மனதில் அழியாதவாறு பதிந்துவிட்ட இவ்விபத்து மனித வரலாற்றிலேயே மிகப் பெரிய கைத்தொழில் விபத்தாக அமைந்துவிட்டது. உலக மக்களை 'போபால்' என்ற சொல்லை உச்சரிக்க வைத்த இவ்விபத்து 'தொழில் ஹிரோஷிமா' என வர்ணிக்கப்படுகிறது.

ச. ஸ்ரீபிரியா ஆண்டு – 10
இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்,

# தமிழீழத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

- தமிழீழத்தில் திராட்சை அதிகம் பயிரிடப்படும் மாவட்டம்:- யாழ்ப்பாணம்

- தமிழீழத் தேசியக்கொடி பறக்கவிடப்பட வேண்டிய கம்பத்தின் உயரம்:- 22அடி

- யாழ்ப்பாணத்திலே உள்ள பெரிய பிரதேசச் செயலர் பிரிவு சாவகச்சேரி/தென்மராட்சி

- தென் தமிழீழத்தில் சனவடர்த்தி கூடிய மாவட்டம்:- மட்டக்களப்பு (ஒரு சதுர கி. மீ. க்கு 134 பேர்)

- அண்மையில் வடமாராட்சியில் சோழர் பண்பாடு பற்றிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இடம்:- வதிரி

- யாழ். குடாநாடு பௌதீக ரீதியாக தோற்றம் பெற்ற காலம்: 'மயோசின்' காலம்

- எமது தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுதலைப் போராட்டம் பற்றி முதன்முதல் பேட்டிவழங்கிய பத்திரிகை:- 'Sunday' எனும் இந்திய ஆங்கில வாரஏடு (1984 மார்ச் 11-17 ஏட்டில்)

- தமிழீழத்தில் நன்னீர் மீன்பிடிப்பு கூடுதலாக நடைபெறும் மாவட்டம்;- திருகோணமலை

- இலங்கைத்தீவின் மொத்தப் பரப்பில் தமிழீழத்தின் நிலப்பரப்பு சதவீதத்தில்:- 28.8%

- தமிழீழத் தேசியக் கொடியின் நீளம்:- 4½அடி அகலம்:- 3 அடி

- வடதமிழீழத்தில் காலத்துக்கு முற்பட்ட ஓவியங்களைக்கொண்டமையம்:- பொலிகண்டி (பொலிகை ஓவியங்கள்)

தொகுப்பு

திருமலை துரை. பிரஷாந்தன்.
ஆண்டு 11 'A' யாழ்.இந்துக்கல்லூரி.

# விளையாட்டு

## விளையாட்டுலகு-சென்ற ஆண்டில் (1994) நடந்தவைகளில் சில....

விளையாட்டுலகம் என்பது மிகவும் பரந்தது, பரபரப்பானது. ஒவ்வொரு ஆண்டிலும், ஒவ்வொரு விளையாட்டுத் துறையிலும் நடப்பவை பல மறக்கமுடியாதவையாகி விடுகின்றன. அவற்றில் பல சாதனைகளும் அத்தோடு இன்னும் பல வேதனைகளும் நிகழ்ந்து விடுகின்றன. சென்ற ஆண்டும் அவ்வாறானதுதான். வெற்றிகள் தோல்விகள் – நல்லவை கெட்டவை இவ்வாறு பல ......

சென்ற ஆண்டு நடந்த சர்வதேச பெருவிழா உலக உதைபந்தாட்டப் போட்டி. நான்கு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் இப் போட்டியின் உச்சகட்டத்தை அமெரிக்காவில் கண்டுகளித்தோம். பிறேசில் வெற்றிக் கிண்ணத்தை எடுத்துச்சென்றது. நீண்ட காலத்தின்பின் மீண்டும் அக் கிண்ணத்தைப் பெற்று ஆடிப்பாடினர் அடுத்த உதைபந்து உலகக் கிண்ணத்திற்காக ஆயத்தங்கள் ஆரம்பமாகிவிட்டன.

இதே உலகக் கிண்ணத்திற்கான போட்டிகளில் பங்குபற்றிய ஆர்ஜன்டீனா வீரன்மரடோனா போட்டிகளின் இடை நடுவில் இடைநிறுத்தப்பட்டது, தனது அணிக்கெதிராகவே கோலடித்த கொலம்பிய நாட்டுவீரன் அன்ரிஸ் எஸ்கோபார் சுட்டுக்கொல்லப்பட்டதும் இவ்வாண்டுதான்.

சென்ற ஆண்டில் நடைபெற்ற பொது நலவாய ஆசிய நாடுகளது தடகளப் போட்டிகளில் பல புதிய உலகச்சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. பழைய முகங்கள் மாறி புதியவர்கள் அறிமுகமானார்கள். உலகத்திலேயே அதிவேகமான மனிதன் வெரோபறல் 100 மீற்றர் தூர தை 9 85 செக்கன்நேரததில் ஓடிச் சாதனை படைத்தான்.

அணு குண்டால் அழிக்கப்பட்டு மீண்டும் அற்புதமாய் உருவாகும் கிரோஷிமா நகரில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சீனா தனது திறமையைக் காட்டியது. யப்பான் நாட்டில்

வைத்தே சீனா யப்பானைத் தோற்கடித்தது. ஆனால் மிகவும் சோகமும் வெட்கமுமான சம்ப வம் சீனாநாட்டு வீரர்கள் போட்டிகளில்உற்சாகமூட்டும் போதைப் பொருட்களை உட்கொண்டனர் என்பது தான் அவர்கள் பல பல வெற்றிகளைப் பெற்றிருந்தும் இறுதியில் நகைப்பிற்கிடமாயினர்.

உலக அதிபார குத்துச் சண்டை வீரனாக இருந்து பின் பறிகொடுத்த பட்டத்தை 20 ஆண்டுகளின் பின் மீண்டும் ஜோர்ஜ் போர்மன் வெற்றிபெற்றார். தனது 45வயதில் மைக்கேல் மூரரைத் தோற்கடித்து அதிவயது கூடிய அதிபார குத்துச்சண்டை முதன்மைவீரன் என்றபட்டத்தையும் தனதாக்கிக் கொண்டார்.

இப்பட்டத்தை 20 வருடங்களின் முன்னர் உலக முதன்மை குத்துச்சண்டை வீரன் முகமது அகலியிடம் பறி கொடுத்திருந்தார்.

இந்தியாவைச்சேர்ந்த மூன்று சிறுவர்கள் நீண்டதூர நீச்சல் சாதனைகளைப் புரிந்தனர். நுபாலி இராமதாஸ் ரெப்பல், றேகன் யேத்தா, வி. குற்றாலீஸ்வரன் ஆகிய சிறுவர்களே இச் சாதனைகள் புரிந்தவர்கள். 12 வயதிற்குக் குறைந்த இவர்களில் அதிக வயது குறைந்தவர் எவர் என்பதில் போட்டி இன்னும் அதிகம்! குற்றாலீஸ்வரன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன் இவன் பாக்கு நீரிணை, ஆங்கிலக் கால்வாய், அந்தமான் கடல் போன்றவற்றை நீந்தி பல்வேறு சாதனைகளைப் படைத்திருக்கிறான்.

பிறேசில் நாட்டு சிறந்த கார் ஓட்டும் வீரன். உலகத்திலேயே எவராலும் வெல்லமுடியாது எனப்புகழப்பட்ட அ்ரன் சென்னாடா சில்வா ஓடு பாதையிலேயே இறக்கவேண்டிய துர் பாக்கிய சம்பவம் விளையாட்டு உலகிலேயே ஒரு துயர சம்பவம் அவனது சவப்பெட்டியருகே அவனது அன்பிற்குரியவர் கண்ணீர் மல்க நின்றகாட்சியை தொலைக் காட்சியிலே பார்த்த பல கோடி விளையாட்டு ரசிகர்கள் கதறி அழுதமை விளையாட்டு என்பது மனிதரிடையே எவ்வளவு நெருக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்குச் சான்று.

அதிக விக்கெற்றுகளை ரெஸ்ற் போட்டிகளில் வீழ்த்தி சேர்றிச் காட், ஹட்லியின் சாதனைகளை கபில்தேவ் முறியடித்ததும் இவ் வருடம்தான்.

மேசைப் பந்து (ரேபிள் ரெனிஸ்) விளையாட்டில் உலக முதன்மை வீரன் ஜீன் பிலிப்பி கேஷன் பிரான்சு நாட்டைச் சேர்ந்த 26 வயதுடைய இவ் வீரனின் எதிர்காலம் மிகவும் பிரகாசமானது.

துடுப்பாட்டத்தில் கதாநாயகன் கபில்தேவ், புகழ்பூத்த வீரர்கள் அலன் போடர், கிவான் லென்டில், கிராக் லெமன்ட் றவி சாஸ்திரியும் விம்பிள்டன் ரெனிஸ் முதன்மை வீரர்களை மாட்டினா நவ்றரிலோவா போன்றவர்கள் மைதானத்திலிருந்து போட்டியிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார்கள். விளையாட்டுத் துறையில் புகழ்பூத்த பரம்பரை பல ஆண்டுகாலமாக வானொலி, தொலைக்காட்சிகளில் மிகவும் அதிகனாகப் பிரகாசித்தவர்கள். இவர்களின் ரசிகர்களுக்கு மிகவும் துக்ககரமான ஆண்டு 1994, இவர்களது நினைவுநீண்டநாள் நிலைத்திருக்கும். இவர்களது சாதனைகளும் சரித்திரமாகும்.

**அ. நிருஷன்**

கடந்த ஒக்ரோபர் – நவம்பர் மாத சாளரம் இதழில் வெளியான ஓவியர் அ.மார்க் அவர்களது நேர்காணல் கட்டுரை தொடர்பாக, இல.1, ஓடைக்கரை வீதி, குருநகர் என்ற விலாசத்திலிருந்து திரு. அ. யேசுராசா சாளரம் நிர்வாகத்திற்கு எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்றது.

மேற்படி நேர்காணலை எழுதிய கட்டுரையாளரினாலேயே மேலுள்ள குறிப்பும் எழுதப்பட்டது என்பதை குறிப்பிட விரும்புகிறோம். சாளரத்தில் பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் சாளரம் நிருவாகத்தினரால் பரிசீலிக்கப்பட்டே பிரசுரமாகின்றன. அவைபற்றிய கருத்துக்களையும், குறைநிறைகளையும் நாம் வரவேற்கிறோம்.

இன்னார்தான் மேற்படி குறிப்பை எழுதினார் என்று பெயர் குறிப்பிடப்பட்டு கடிதத்தில் சொல்லபபட்டுள்ள ஊகம் தவறானது. அத்துடன் 'வேண்டுமென்று சாளரத்தில் மாறாட்டம் செய்யப்பட்டுள்ளன, 'தேடலும் படைப்புலகமும் என்ற நூலை கொச்சைப்படுத்துவதே 'சாளரம்' குறிப்பின் நோக்கம், என்றெல்லாம் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை மிகத் தவறான கருத்துக்களாகும். எவரையும் திட்டமிட்டுத் தாக்குவதோ, கொச்சைப்படுத்துவதோ சாளரத்தின் நோக்கம் அல்ல. அவ்வாறானதோர் உணர்வுத்தளத்திலிருந்து 'சாளரம், வெளியிடப்படுவதில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

— **நிர்வாகம்**

# செய்மதி செய்திகள்

அறிவியல் உலகம் இன்று பிரமிக்கத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுவருகின்றது. அறிவியல் விரிய விரிய உலகம் மிகவும் சுருங்கிவருகின்றது.

இது என்ன முரண்பாடு என்று யோசிக்கின்றீர்களா?

ஆம் அறிவியலின் விரிவில் உலகம் சுருங்கித்தான் போய்விட்டது. எப்படி?

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கு யாழ்ப்பாணத்திலிருந்து சிறீலங்காவின் தலைநகருக்கு ஒரு செய்தியை அனுப்புவதானால் எத்தனை வாரங்கள் சென்றிருக்கும்? (என்ன இன்றும் அப்படித்தானே இருக்கிறது என்கிறீர்களா?) சாதாரண சூழ்நிலை ஆக இருந்தால்—விமானமானால் அரை மணிநேரம், மோட்டார் வாகனமான ால் அரைநாள், தொடர்புச் சாதனங்களானால் சில வினாடிகள் போதும்.

இப்போது (Satellite) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற செய்மதி உலகை மிகமிகச்சிறிய தாக்கி விட்டது. ஒரு மூனறு செய்மதிகளைக்கொண்டு பூமி முழுவதையும் தொடர்புபடுத்தி விடமுடியும்.

பூமி என்ற நாம் வாழும் கிரகம் சூரிய மண்டலத்தில் இருக்கிறது. இதனைப்போல் ஒன்பது-தற்போதைய கண்டுபிடிப்பையும் சேர்த்தால் மொத்தம் பத்துக் கிரகங்கள் சூரியனைச்சுற்றுகின்றன. இந்தக் கிரகங்களை சில குட்டிக் கிரகங்கள் சுற்றுகின்றன. இவை உபகிரகங்கள் (Satellite) என்று அழைக்கப்படுகின்றன.

பூமிக்கு இயற்கையாகவே ஒரு (Satellite) இருக்கிறது. அதுதான் சந்திரன் – நிலா. இந்தச் சந்திரன் சில இரவுகளில் ஒளியைத் தரு



கின்றது. உண்மையில் அதன் அமைப்பு வெறும் பாழ் வெளி யாகும்.


பூமி, சூரியன், சந்திரன் எல்லாம் ஈர்ப்புவிசை எனும் இயற்கை ஆதாரத்தைக் கொண்டே இயங்குகின்றன.

பூமி நாம் வாழுகின்ற உப யோகமான உலகம். சந்திரன் வாழ்வுக்கேற்ற இடம் அல்ல. பூமியைச் சந்திரன் சுற்றுவது ஈர்ப்பு விசையைக் கொண்டுதான். இந்த ஈர்ப்பு என்கிற இயற்கை ஆதாரத்தைக்கொண்டு தமக்குத் தேவையான பல காரியங்களை ஆற்றுவதற்கு 'செயற்கைச் சந்திரன்'களை மனிதன் உருவாக்கினான். இன்றைக்கு பூமியைச் சுற்றி ஆயிரக்கணக்கான செயற்கைச் சந்திரன்கள் அதாவது செய்மதிகள் ஆக்கிரமித்துள்ளன. உலகின் பெருவல்லரசான அமெரிக்காமுதல் ஏழை நாடான இந்தியாவரை பல நாடுகளுக்குச் சொந்தமான செய்மதிகள் பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

ஒரு மலை இடுக்கினுள் துப்பாக்கி ஏந்திநிற்கும் இராணுவ வீரன் முதல், பூமிக்குக் கீழேயுள்ள வளங்கள்வரை அனைத்தையும் மிக உன்னிப்பாகக் கண்காணிக்கும் ஆற்றல்மிகு செய்மதிகள் உள்ளன.

செய்மதியொன்றில் அலைகளை வாங்கவும் அனுப்பவுமான சாதனங்கள் யாவும் பொதுவாகப் பொருத்தப்பட்டிருக்கும்.

ஒரு தொலைத்தொடர்புச் செய்மதி அமெரிக்காவிலிருந்து அனுப்பப்படும் அலைவடிவமான செய்தியை தமிழீழத்திற்கு வழங்கும் ஆற்றல் கொண்டது.



உளவு பார்க்கும் செய்மதியில் சக்திமிக்க தொலைநோக்கி இருக்கும். இது எதிரிநாட்டின் இராணுவ நகர்வுகளைக் கண்காணித்துச் சேர்ந்த நாட்டிற்குத் தகவல் சொல்லும். அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் மட்டுமே இச்செய்மதிகளை வைத்திருக்கின்றன.

ஒரு புவியியல் செய்மதியில் வானொலி தொலைநோக்கி அல்

லது லேசர் சாதனம் இருக்கும். இது பூமியின் நிலப்பரப்பைத் துளைத்து நிலக்கீழ் கனிய வளங்களை, நீர் வளங்களை அடையாளம் காட்டும். இந்தியா கடைசியாக அனுப்பியுள்ள செய்மதி இவ்வாறானதே.


தேடுதல் செய்மதி ஒரு-விமானத்திற்கோ, கப்பலுக்கோ ஆபத்து வந்தால் அதனை அந்த நாட்டுக்கு அறிவிக்கும்.

வானிலைச் செய்மதி – வானிலைத் தொடர்பான அனைத்து விடயங்களையும் அறிவிக்கும். புயல் எங்கே மையம் கொண்டுள்ளது என்பதை முன்னரே அறிவித்துவிடும்.

இவ்வாறாக மனிதன் தமக்குத் தேவையான காரியத்தைச் செய்வதற்கு ஏற்றவாறு செய்மதிகளை உருவாக்கி அனுப்பிக் கொண்டே இருக்கின்றான்.

முதலாவதாக விண்வெளிக்கு அனுப்பிவைக்கப்பட்ட செய்மதியின் பெயர் 'ஸ்புட்னிக்' ஆகும். 1957 ஒக்ரோபர் 04 ஆம் திகதி அப்போதைய சோவியத்யூனியன் 'ஸ்புட்னிக்' செய்மதியை அனுப்பியது. இதுவே செய்மதிகளுக்கான 'விண்வாசலை'த் திறந்து வைத்தது. இந்தச்செய்மதி செய்த வேலை ஒரு வானொலிச் சமிக்கையை (பீப் பீப் என்ற ஒலி) பூமிக்கு அனுப்பியதுமட்டுந்தான்.

**தி. தவபாலன்**



''என்ன அதிசயம் பூனையார் எங்களைக் கண்டவுடன் அப்படி பயந்து ஓடுறார்.

''எல்லாம் 'பிளேக்' பயம்தான்.''

# கேள்வி பதில்

— ஆனந்தி —

பா. பிரதீபன்
காட்விக்கல்லூரி, பருத்தித்துறை.

☐ சூரியகலத்தட்டில் எவ்வாறு சூரியஒளி மின்னாக மாற்றப்படுகிறது?

சூரியக்கலங்களின் சிலிக்கன் மூலகத்தினாலான கலத்தில் சூரியசக்தி போட்டோன்கள உள்ளன. இக் கலத்தில் உள்ள, போரன் பொசுபரசு அணுக்களினால் மாசுபடுத்தப்பட்ட, சிலிக்கன் P—N சந்தி இணைப்பில், போரன் அணுக்களினால் மாசுபடுத்தப்பட்ட சிலிக்கன் பகுதி நேர்மின்னேற்றத்தைக் குறிக்கும். இது P-வகைப் பொருள் எனப்படும். இதில்துளைகள் உண்டாகும். பொசுபரசு அணுக்களினால் மாசுபடுத்தப்பட்ட சிலிக்கன் பகுதி மறை மின்னேற்றத்தைக் குறிக்கும். இது N-வகைப் பொருள் எனப்படும். இதில் சுயாதீன இலத்திரன்கள் உண்டாகும். இதில் ஒளி படும் போது ஒளிச்சக்தியில் உள்ள போட்டோன்கள் குறை கடத்தியில் உள்ளவலுவளவு இலத்திரன்களுடன் மோதுவதால், அவை அணுக் கருக் கவர்ச்சி விசையில் இருந்து விடுபட்டு அசைவை உண்டாக்குகின்றன. இந்த நிலையில் துளைகளை நோக்கி, இலத்திரன்கள் ஓடுவதால், மின்னோட்டம் பெறப்படுகின்றது.

ப. பிறேமலதா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

☐ கண்ணீர் ஒரு கழிவுப்பொருள் அல்ல என்று சொல்லப்படுகின்றது விளக்கம் தாருங்கள்?

கண்ணில் உள்ள ''லக்ரிமல்'' சுரப்பியினால் சுரக்கப்படும் திரவமே கண்ணீர், இது கண்ணில் உள்ள அழுக்குகளையும் தூசிகளையும் வெளியேற்ற உதவும். திரவமே ஒழிய அது ஒரு கழிவுப் பொருள் அல்ல.

## மிகவும் உதவுகின்றது




சாளரத்தை 'விரும்பி' நேசிக்கும் வாசகர்களுள் நானும் ஒருவர். மிகவும் புதிய செய்திகளையும் பலவகையான படைப்புக்களையும் கொண்டு தமிழ் ஈழம் எங்கும் உலாவி வருகின்றது. படிப்போடு இணைத்து பொது அறிவையும் வளர்ப்பதற்கு பெரிதும் உகந்ததாக உள்ளது. இச் சாளரத்தில் மேற்குலக நாடுகளிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் தற்கால பிரச்சனைகளையும் எடுத்தியம்பலாம் என்பது என் கருத்து 1995ம் ஆண்டும் சாளரம் சிறப்புடன் இம்மண்ணிலே உலாவட்டும்.

இ. தயாளினி
ஆண்டு 9 யா. வேம்படி மகளிர் கல்லூரி.

## மாறாத நன்றிகள்

கடந்த சாளரம் இதழை வாசித்தேன். அனைத்து விடயங்களையும் சிறப்பாகத் தந்துள்ளீர்கள். இதழ் நிறைவானதாக இருந்தது. 'பகலவன் பதில்கள்' பகுதியில் ஜனாதிபதி தேர்தல் பற்றிய கேள்விக்கு அளித்த பதிலில் தவறு நிகழ்ந்துள்ளது. அதாவது தேர்தல் முடிந்தபின்னர் வெளிவந்த இதழில் தேர்தல்பற்றிய எதிர்வுகூறல் உள்ளது. இதுபோன்ற காலத்தவறுகளை இனியும் விடாதீர்கள். சந்தா செலுத்தி இதழைப்பெற வழிவகுத்தீர்களானால் மிகவும் நன்மையாக இருக்கும்.

'நிலாமுற்றம்' மிகச்சிறப்பான ஓர் விடயத்தை வெளிக்கொணர்ந்தது. வரலாற்றை வளர்த்தெடுத்த பாமர மக்களை வரலாற்றில் மறக்கக்கூடாது என்ற கருத்து என்னை மிகவும் கவர்ந்தது. அறிவியல், மருத்துவம், சிறுவர்பகுதி மொழிஅறிவு, நகைச்சுவை, அரசியல் எனப்பல அம்சங்களை சாளரத்தினூடாக எம்மால் நுகரமுடிகிறது.

சாளரம் வளர்க. வெல்க.

வேதநாயகம் தபேந்திரன்
70/7 பழைய பூங்காசாலை, யாழ்ப்பாணம்.

(ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக வெளிவரவேண்டிய இதழ் அது. விடயங்கள் யாவும் தயாரிக்கப்பட்டு, பக்கங்களும் முதலே அச்சிடப்பட்டு விட்டன. தவிர்க்கமுடியாத காரணங்களினால் இதழ் வெளிவரத்தாமதமாகியது. அதனாலேயே பகலவன் பதிவில் 'தவறு' ஏற்பட்டது. இனிமேல் இவ்விதயான தவறு ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறோம். ஆ-ர்)

## செயற்படுத்துவோம்!

கடந்த இதழில் பிரசுரமான ஓவியர் மார்க் அவர்களின் பேட்டி வாசித்தேன். மார்க் அவர்களின் பதிலில் ஓவியம் தொடர்பான பிரயோசனமான கருத்துக்களை அறியக்கூடியதாக இருந்தது. மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாணவர் ஆக்கங்களை பிரசுரிப்பது பாராட்டக்கூடிய விடயம். சாளரத்தில் வெளிவரும் அனைத்து விடயங்களும் மாணவர்களுக்கு அவசியமானவை என்றே நாம் கருதுகிறோம்.

'மாணவர் பக்கம்' எனத்தனியாக ஒருகட்டுரை பிரசுரிக்கப்படுவது ஏன்? அப்படியானால் மற்றைய பக்கங்கள் மாணவர்களுக்கானவை இல்லையா? 'மாணவர் பக்கம்' என்று குறிப்பிடாமல் கட்டுரை பிரசுரிக்கப்படுவதே நல்லது என்பது என்னுடைய பணிவான அபிப்பிராயம்.

யே. ஞானசேகரன்
மட்டுவில்

## எதிர்பார்ப்பு

நாம் ஆவலோடு வாசிக்கும் சாளரம் இதழ் மாதந்தோறும் வெளிவருவது சில வேளைகளில் தடைப்பட்டு விடுவது ஏன்? அதேநேரம் எமது பாடசாலைகளுக்கு மிகவும் பிந்தியே அனுப்பப்படுகிறது. புத்தாண்டிலிருந்து இவ்வாறான தடைகளை நிவர்த்தி செய்யுங்கள். எமது பிரதேசத்தில் எல்லாப் பாடசாலைகளுக்கும் ஒழுங்காக சாளரத்தை விநியோகம் செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம். எல்லா புத்தக நிலையங்களுக்கும் விற்பனைக்கு கொடுப்பது நல்லது.

சி. கணேசமூர்த்தி
திருவையாறு, கிளிநொச்சி.

# விக்ரோறியா அரசி

**1942** ஆம் ஆண்டு......

மனித குலம் மறக்க முடியாத அந்த ஆண்டு... அதிகார வெறியும், வல்லரசுப் போட்டியும், மண் ஆசையும் நிலைக்களனாகக் கொண்டு நாடுகளிடையே ஏற்பட்ட முரண்பாடுகளினால் விளைந்த இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த அந்தக் காலப்பகுதி......!

மக்கள் அமைதியின்றித் தவித்தனர்!

பசியும், பட்டினியும் தலைவிரித்தாடியது!

பீரங்கிகளும், துப்பாக்கி வேட்டுக்களும் தேசமெங்கும் அதிர்ந்து கொண்டிருந்தன...

ஜேர்மனி, இத்தாலி, பிரித்தானியா, யப்பான், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் ஒவ்வொன்றும் தமக்குள்ளே சபதம் எடுத்துக் கொள்கின்றன!

யார் மிகப் பெரிய வல்லரசாக இந்த உலகத்திலே வலம் வருவது? இது அந்த நாடுகளின் தலைவர்களாக விளங்கிய கிட்லர், முசோலினி, சேர்ச்சில் போன்றவர்களிடையே பூதாகாரமாக உருவெடுத்த ஆசை பெரும் உலக யுத்தமாக வெடித்துக் கொண்டிருந்தது!

பிரித்தானிய சாம்ராஜ்யம், கீழைத்தேய நாடுகளைத் தன் குடையின் கீழ் கொண்டுவருவதிலும், தன் அதிகார வரம்பினுள் அடக்குவதற்கும் முனைப்போடு செயற்பட்டுக் கொண்டிருந்தது.

உலகமெங்கும் போர் வெறி தலைவிரித்தாடியது!...

கைத்தொழில் புரட்சியின் மூலம், பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சியில், தலை நிமிர்ந்து நின்ற பிரித்தானியா, உலகின் முதல்தரமான வல்லரசாக விளங்க வேண்டுமென்ற இலக்கில் அது தன் முழுப் பலத்தையும் அந்தப் போரிலே காட்டிக் கொண்டிருந்தது.

"ஹா... ஹா... இந்தப் பிரித்தானிய சாம்ராஜ்யம், ஐரோப்பாவில் மட்டுமல்ல, தென்கிழக்காசியா எங்கும், தன் ஆதிக்கக் கொடியை நாட்டவேண்டும். எங்கள் கப்பற்படை, விமானப்படை, தரைப்படை, ஆகியவற்றின் சக்தியை இந்தப் போரின் மூலம் சர்வதேச அரங்குக்கு எடுத்துக் காட்டவேண்டும்."

தன் நீண்ட குழல் போன்ற சுருட்டை வாயில் வைத்துச் சப்பிய படியே பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், படைத் தளபதிகளின் ஆலோசனை மகாநாட்டில் முழங்கிக் கொண்டிருந்தார்.

அவரது அந்த வீர முழக்கம் பிரித்தானியாவின் மூலை முடுக்கெங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

தரை, வான், கடல் வழியாகத் தன் பலத்தைப் பிரயோகித்து முன்னேறிக்கொண்டிருந்த பிரித்தானியாவின் படைப் பிரிவுகளில் சக்தி வாய்ந்த ஒரு பிரிவாக விளங்கியது, பிரித்தானியாவின் கப்பற்படைப்பிரிவு.

''விக்ரோறிய அரசி'' (Queen Victoria) என்ற அந்தப் பாரிய ஆயுதம் தாங்கிய கப்பல், தென்கிழக்காசிய எல்லைகளைத் தன் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவது போல் வட அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாக கம்பீரமாக வலம் வந்து கொண்டிருந்தது!

அப்பொழுதுதான், பொருளாதார வளர்ச்சியில், சிறிது சிறிதாக முன்னேறிக் கொண்டிருந்த யப்பான், அந்தப் போருக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தது.

ஜேர்மனியும், இத்தாலியும் ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டிருந்த காலத்தில், ஆசியாவில் ஒரு பேரரசைக் கட்டி எழுப்புவதற்காக யப்பான் முனைப்போடு நின்றது. கீழைத்தேய குடியேற்ற நாடுகள் பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவற்றின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையினால், பேரரசைப் பெருப்பிக்கும் ஆவலில் யப்பான் இந்த வல்லரசுகளுடன் போரிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

யப்பானும் அதன் போர்ப்பலத்தினால் சிங்கப்பூர், கொங்கொங், மலேசியா, பர்மா போன்ற பிரித்தானியக் குடியேற்றங்களைக் கைப்பற்றியது.

யப்பானியப் படைகளுக்கெதிராகத் தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து யப்பானியரின் பேரரசுக் கொள்கையை நிர்மூலமாக்கும் நோக்குடன், நாவன்மை, இராஜதந்திரம், வல்லமை படைத்த வின்ஸ்டன் சேர்ச்சில் நாசிசத்திற்கு எதிரான போரிலே ஒத்துழைக்குமாறு நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

பிரித்தானியப் படைகளின் தொகையுடன் ஒப்பிடுகையில், யப்பானியப் படைகளின் தொகை குறைவாகவே இருந்தாலும் யப்பானிய வீரர்களின் உறுதி குலையாத வீரமும், யப்பானிய மக்களின் தேசப்பற்றும் அன்னிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான ஒரு மாபெரும் சக்தியாகத் தன்னை வளர்த்துக்கொண்டு எழுச்சி பெற்றது!

''ஓ...எங்கள் தாயகத்தை அன்னிய ஏகாதிபத்திய வாதிகளின் கோரப் பிடியினுள் விடமாட்டோம்...... எங்கள் மண்ணின் ஒரு அங்குலத்தையேனும் விட்டுக் கொடுக்கமாட்டோம்...... இந்த மண்ணின் கடைசி யப்பானிய வீரன் இருக்கும் வரை

யில், இந்த யப்பானிய மண் என்றுமே அன்னியனுக்கு அடிமைப்படாது...''

ஆம்!...... யப்பானிய மக்களின், உணர்வுகள் விழித்துக்கொண்டிருந்தன......... தாயகத்தைக் காக்க வேண்டும் என்ற தேசியப் பற்று, ஒவ்வொரு யப்பானிய வீரனின் இதயத்திலும் ஆழமாகப் பதிந்துபோய் இருந்தன!

வட அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாக வலம் வரும் ''குயின் விக்ரோறியா'' கப்பலின் முன்னேற்றம் தடுக்கப்படாவிட்டால், யப்பான் பாரிய இழப்புக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்ற அச்சம், ஒவ்வொரு யப்பானிய வீரனையும் சிந்திக்கத் தூண்டியது.

''எனது இழப்பின் மூலம் ஆயுதம் தாங்கிய விக்ரோறியா கப்பலை தகர்த்தால் என்ன...?

யப்பானியவிமானப்படையைச் சேர்ந்த இளைஞன் சுசுக்கியின், உணர்வுகள் அந்த மண்ணுக்காக விழித்துக் கொண்டன.

''என் தசையும்...... என் குருதியும் ......
என் ஆவியும்... இந்த மண்ணுக்காகவே அர்ப்பணிக்கப்படுமானால்... நான் பெற்ற இன்பம் என் தேசமே பெற்றுவிடும்...''

அந்த யப்பானிய வீரன் சுசுக்கி தன் உயிரை, யப்பானிய மண்ணுக்காக அர்ப்பணிக்கத் தயாராகிவிட்டான்...

'குயின் விக்ரோறியா' கப்பலை நான் தகர்த்து விடுகிறேன். அதற்கு தங்கள் அனுமதி வேண்டும்...'

படைத் தளபதியிடம் சென்று சுசுக்கி விடுத்த வேண்டுகோள், அவனை வியப்புக்குள்ளாக்கியது...

''என்ன! சுசுக்கி நீயா... அந்தப் பாரிய கப்பலைத் தகர்க்கப் போகிறாய்...... யூ...... ரூ...... சிமோல்...''

படைத்தளபதிக்கு வந்த சிரிப்பை அடக்கியபடி அவனை எள்ளிநகையாடுவது போல் சிரித்தான்.

''ஐயா...! நான் வெடி மருந்துடன் அந்தக் கப்பலின் புகை போக்கியினுள் குதிக்கப்போகிறேன்...

அதற்கு அனுமதி தரவேண்டும்...''

அவன், உறுதியாக நெஞ்சை நிமிர்த்தியபடி கூறியதும், அந்தப் படைத் தளபதி திடுக்கிட்டான்... ''ஓ... என்ன இது?... தற்கொலை புரியப் போகிறாயா?... இது உன்னால் முடியக்கூடிய காரியமா?''

(மிகுதி அடுத்தஇதழில்)

# ஆங்கிலம் கற்போம் - 09 -

| | | | |
|---|---|---|---|
| **Bala:-** Selvan, what are you doing? | — | பாலா :- | செல்வன் நீர்என்ன செய்துகொண்டிருக்கின்றீர்? |
| **Selvan:-** I'm cleaning up the bunker. We don't need it any more. I'm thinking of closing it. | — | செல் :- | நான் பதுங்கு குழியைத் துப்பரவுசெய்கிறேன். இனிமேல் அதுஎங்களுக்குத்தேவைப்படமாட்டாது. நான் அதை மூடுவதற்கு நினைக்கின்றேன். |
| **Bala:-** Why do you say that? | — | பாலா :- | நீர் ஏன் அவ்வாறு சொல்லுகிறீர்? |
| **Selvan:-** Negotiations are going on between the Sri Lankan Government and the LTTE. We will soon have a solution to all our problems. | — | செல் :- | அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றது. விரைவில் எங்கள் சிக்கல்களுக்கெல்லாம் ஒரு தீர்வு ஏற்படும். |
| **Bala:-** Don't be in a hurry. You had better wait and see what happens at the negotiating table. We are only at the initial stage of this whole process of negotiations. | -- | பாலா :- | அவசரப்பட வேண்டாம். பேச்சுவார்த்தையின்போது என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். இந்த முழுப் பேச்சுவார்த்தை நடவடிக்கையின் தொடக்கக் கட்டத்தில் மாத்திரமே நாங்கள் இருக்கின்றோம். |
| **Selvan:-** But we are now enjoying a peaceful situation after the declaration of the cessation of hostilities. | — | செல் :- | ஆனால் மோதல் தவிர்ப்புப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் நாங்கள் இப்போது ஒரு அமைதி நிலையை அனுபவித்துக்கொண்டு இருக்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| **Bala**:- | The ceasefire is only onc part of the story. How long it last depends on the future developments. — | பாலா :- | இந்தப் போர் நிறுத்தம் எங்கள் விடயத்தின் ஒரு பகுதிமட்டுமாகும். அது எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமென்பது இனிமேல் ஏற்படும் முன்னேற்றங்களிலேயே தங்கியிருக்கின்றது. |
| **Selvan**:- | Oh! Don't be such a pessimist. You are always looking on the gloomy side of things. — | செல் :- | ஓ! இவ்வாறான ஒரு தோல்வி மனப் மனப்பான்மை கொண்டவராக இருக்க வேண்டாம், நீர் எப்பொழுதும் விடயங்களின் இருண்ட பக்கத்தையே நோக்குகின்றீர் |
| **Bala**:- | Don't say that! I am only trying to be a realist. Don't you know the history of our struggle? On so many occasions the Sri Lankan Government has not lived up to its promises! — | பாலா :- | அவ்வாறு சொல்லாதீர்கள். நான் ஒரு யதார்த்தவாதியாக இருக்க முயற்சிக்கின்றேன். எங்கள் போராட்டத்தின் வரலாற்றை நீங்கள் அறியவில்லையா? பல பல தடவைகளில் இலங்கை அரசு தனது வாக்குறுதிகளுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை. |
| **Selvan**.- | What makes you think that hence won't be a permanent solution this time? — | செல் :- | இந்தத் தடவை ஒரு நிரந்தரமான தீர்வு ஏற்படமாட்டதென எது உங்களைநினைக்கச் செய்கிறது. |
| **Bala**:- | You seem to be confused about the main issue. The ceasefire is one thing, and the permanent solution to the long standing problem between the Tamils and the Sri Lankan Government, is another. — | பாலா :- | முக்கிய விடயத்தைப் பற்றி நீர் குழப்பமடைந்துள்ளீர்போல் காணப்படுகின்றீர். போர்நிறுத்தம் என்பது ஒரு விடயமாகும். தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான எங்களது நீண்டகாலச் சிக்கலுக்கான நிரந்தரத்தீர்வு என்பது வேறுவிடயமாகும். |
| **Selvan**:- | I know very well we have a long history of conflict, and that the ethnic problem is a very deep and com- — | செல் :- | இந்த இனச்சிக்கல் ஆழமானதும், சிக்கலானது என்பதும், இந்த முரண்பாட்டுக்கு ஒரு நீண்ட வரலாறுஇருக்கின்றதென்பதும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | problem is a very deep and complicated one. But how long can we go on like this? Can't we be satisfied with the lifting of the economic blockade? | | | என்பதும், இந்த முரண்பாட்டுக்கு ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றதென்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இதேபோக்கில் நாங்கள் எவ்வளவு காலத்துக்குச் செல்ல முடியும்? பொருண்மியத் தடை நீக்கத்துடன் நாங்கள் திருப்தி அடையக் கூடாதா? |
| **Bala:-** | What are you talking about? The economic embargo is not yet fully lifted. The ban on Fishing is not lifted. People can't go fishing freely. The pathway from Jaffna peninsula to the main land is not opened. | — | *பாலா:-* | நீர் எதைப்பற்றிக் கதைக்கிறீர்? பொருண்மியத் தடை இன்னமும் முற்றாக நீக்கப் படவில்லையே மீன் பிடிப்பதற்கான தடை நீக்கப்படவில்லை. மக்கள் சுதந்திரமாக மீன் பிடிக்கச் செல்லமுடியாது. யாழ்ப் பாணக் குடாநாட்டிலிருந்து நாட்டின் பெரு நிலப்பகுதிக்குச் சீரான பாதை திறக்கப்படவில்லை. |
| **Selvan.-** | Yes! There are so many issues yet to be resolved. | — | *செல்:-* | ஆம் இன்னும் பல விடயங்கள் தீர்க்கப் படவேண்டி இருக்கின்றன. |
| **Bala:-** | That's right . A peaceful environment is good for the people and creates a cordial condition for nego tiations.But a permanent solution to our problem should reflect the depth of the sacrifices we have already made. | — | *பாலா:-* | அது சரிதான் மக்களுக்கு ஒரு சமாதான சூழ்நிலை நல்லதாக இருப்பதுடன், பேச்சு வார்த்தைகளுக்கு அது ஒரு சுமூகமான நிலையையும் உருவாக்கும். ஆனால் எங்களது சிக்கலுக்கான நிரந்தரத் தீர்வு ஏற்கனவே நாங்கள் செய்துள்ள தியாகங்களை முழு அளவில் பிரதி பலிக்கவேண்டும். |
| **Selvan:-** | Of course, you are petfectly correct. Our basic principles and aspirations | — | *செல்:-* | நிச்சயமாக நீர் சொல்வது முற்றிலும் சரியாகும். எங்களது அடிப்படைக் கோட் |

have to be guaranteed. But then, perhaps, the Sri Lankan government may reject our demands, and once again opt for a military solution!

பாடுகளுக்கும் அபிலாசைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். ஆனால் இலங்கை அரசு எங்களது கோரிக்கைகளை நிராகரித்துப் பின்னர் மீண்டும் ஒரு படைரீதியான தீர்வை நாடலாம்.

**Bala:-** Yes, we should be prepared for any such eventuality. The way the negotiations are dragging on it is not a good sign. Unfortunately the Government seems to be under the influence of the army leadership. —

பாலா:- ஆம் அப்படியான எந்தப் பின் நிகழ்வுக்கும் நாங்கள் தயாராக இருக்க வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தைகள் இழுபறி நிலையில் இருப்பது ஒரு நல்ல அறிகுறியல்ல. துரதிஷ்டவசமாக இலங்கை அரசு படைத் தலமைப்பீடத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பது போன்று தோன்றுகிறது.

**Selvan:-** I quite agree with you. Perhaps I shouldn't be in such hurry to close the bunker. We should not forget our past experience with the Indian peace - Keeping Force (IPKF) When they came here, everyone was in a state of euphoria and started closing their bunkers! —

செல்:- நீர் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். பதுங்குழியை மூடுவதில் நான் இவ்வளவு அவசரம் காட்டக்கூடாது. இந்திய அமைதிப்படையுடனான எங்களது கடந்தகால அனுபவங்களை நாங்கள் மறக்கக்கூடாது. அவர்கள் இங்கு வந்தபோது எல்லோரும் மனநிறைவு நிலையில் தங்களது பதுங்குகுழிகளை மூடத் தொடங்கினார்கள்.

**Bala:-** That's right. I'm glad you have a good memory. —

பாலா:- அது சரிதான். உமக்கு நல்ல ஞாபகசக்தி இருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

good memory.

இருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்

# பொது அறிவுப் போட்டி-8

1) ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையின் பெயர்–

(i) டி. எஸ். சேனாநாயக்கா
(ii) எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா
(iii) றத்வத்த

2) ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (A. N. C.) உதயமான ஆண்டு–

(i) 1908 (ii) 1962 (iii) 1912

3) தமிழீழத்தில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 21 தொடக்கம் 27 வரை கொண்டாடப்படுகின்ற முக்கிய நிகழ்வு–

(i) மாவீரர் நாள்
(ii) அன்னை பூபதி நாள்
(iii) தியாகி திலீபன் நாள்

4) கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இராணுவ கனரக வாகனமானது–

(i) பவள் கவச வாகனம்
(ii) ஜீப் வாகனம்
(iii) T. 55 பிரதான சமர் டாங்கி

5) உலகிலேயே மிளகாய் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு–

(i) இலங்கை (ii) இந்தியா (iii) சீனா

6) பொதுநலவாய நாடுகளின் 15ஆவது விளையாட்டுப் போட்டி அண்மையில் இங்கு நடைபெற்றது–

(i) ஜப்பானில் (ii) கனடாவில்
(iii) அவுஸ்த்திரேலியாவில்

7) Cemetery என்ற ஆங்கிலப்பதம் Koimao எனும் பின்வரும் நாட்டுச் சொல்லிலிருந்து வந்தது.

(i) ஜப்பான் (ii) அமெரிக்கா (iii) கிரேக்கம்

8) பொன்னாங்காணி, அகத்தி, முருங்கை இலை, முளைக்கீரை, தவசி முருங்கை, சண்டி இலை போன்றவற்றில் போதிய அளவு இச் சத்து அடங்கியுள்ளது.

(i) இரும்புச்சத்து
(ii) விட்டமின் 'ஏ'
(iii) விட்டமின் 'சி'

☐ விடைகளை எழுதியனுப்பும் வாசகர்கள், கேள்விகளை குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. சரியாக இலக்கமிட்டு விடையினை மட்டும் தெளிவாக எழுதினால் போதுமானது.

## கடந்த பொது அறிவுப் போட்டி-7க்கான விடைகள்

1) யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் காலஞ்சென்ற பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் பிறந்த ஆண்டு 1934.

2) நுண்ணுயிர்கள் எமது உடலுக்குள் புகுவதைத் தடுக்கும் முதல் அரண் என்பது – தோல்.

3) பரம்பரை அலகுகளைக் (Genes) கொண்டுள்ள டி. என். ஏ. (D. N. A.) என்ற பதார்த்தத்தைக் கண்டுபிடித்த பிரெட்ரிக் மிஷெர் (Ferdric Misher) என்ற விஞ்ஞானி – சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

4) 1895-ஆம் ஆண்டு வில்லியம் மோகன் என்பவரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட விளையாட்டு – கரப்பந்தாட்டம்.

5) சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகாவின் கணவர் திரு. விஜயகுமாரணதுங்கா இவர்களால் கொலை செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது – ஜே. வி. பி. இனரால்.

6) தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மனைவி பெயர் – வின்னி.

7) இரண்டாவது உலகப் போரின்போது அமெரிக்காவின் குண்டு வீச்சினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு – ஜப்பான்.

8) மனிதனை சில சமயங்ளில் கடலில் ஆபத்திலிருந்து காப்பாற்றும் மீனினம் – டொல்பின்.

சரியான விடைகளைத் தெரிவுசெய்து அனுப்பியவர்களில் அதிர்ஷ்டசாலிகள் பின்வருமாறு:—

### முதலாம் பரிசுக்குரியவர்

செல்வி ஜனனி நல்லைநாதன்
213, கண்டி வீதி, அரியாலை.

### இரண்டாம் பரிசுக்குரியவர்

ஆன் சுபோதினி துசை
யாழ். கன்னியர் மடம் ம. வி.
(வர்த்தகப் பிரிவு 1996)

### மூன்றாம் பரிசுக்குரியவர்

யோகநாதன் சிவராம்
(யா/யூனியன் கல்லூரி)
'துர்க்கா பவனம்'
தாவடி வடக்கு, கொக்குவில்.

இவர்களுக்குச் சாளரம் வழங்கும் பணப் பரிசில்கள் முறையே 250 ரூபா, 150 ரூபா, 100 ரூபா வழங்கப்படும். சனிக்கிழமைகளில் பகல் 12 மணிக்கு முன்னதாக சாளரம் அலுவலகத்தில் வந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.